# பொதுத்துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2024 – 2025

## மானியக் கோரிக்கை எண். 38

# திரு. மு.க. ஸ்டாலின்

மாண்புமிகு முதலமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2024

<u>பொருளடக்கம்</u>


| வ. எண். | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | தமிழ் நாட்டிற்கு வருகை புரிந்த மிக முக்கிய விருந்தினர்கள், அயல்நாட்டுத் தூதுவர்கள் | 6 |
| 3. | தேசிய விழாக்கள், சிறப்பு நாட்கள், பொது விடுமுறை நாட்கள் அறிவிப்பு, விருதுகள் | 8 |
| 4. | அரசு விருந்தினர் இல்லங்கள் | 13 |
| 5. | அயல்நாட்டினர் | 30 |
| 6. | முதல்வரின் முகவரித் துறை | 34 |
| 7. | முன்னாள் படைவீரர் நலத்துறை | 43 |
| 8. | தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (டெக்ஸ்கோ) | 75 |
| 9. | மாநில மனித உரிமைகள் ஆணையம் | 82 |
| 10. | முடிவுரை | 90 |

# பொதுத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2024–2025

## 1. முன்னுரை

மாநிலத்தின் பொது நிர்வாகம் பொதுத் துறையால் கவனிக்கப்படுகிறது. மாண்புமிகு ஆளுநர், முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களின் பதவியேற்பு நிகழ்ச்சியையும், தேசிய விழாக்களான சுதந்திரத் திருநாள் மற்றும் குடியரசுத் திருநாள் விழாக்களுக்கான ஏற்பாடுகள் மாவட்ட ஆட்சியர்கள், காவல் மற்றும் வன அலுவலர்கள் மாநாடு, முதலமைச்சர் அலுவலக நிர்வாகம், அமைச்சர்கள் அலுவலக நிர்வாகம், இந்திய குடிமைப்பணி அலுவலர்களின் நிர்வாகம் மேலும் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் நிர்வாகம் தொடர்பான பணிகள், மிக மிக முக்கிய நபர்கள், முக்கிய நபர்கள் மற்றும் பிற உயர் அதிகாரிகளின் வருகை தொடர்பான மரபு சார் அனைத்துப் பணிகளும் இத்துறையால் கையாளப்பட்டு வருகிறது.

பல்வேறு வகைப்பட்ட பொருண்மைகளை இத்துறை கையாள்வதன் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேரடிக் கண்காணிப்பில் இத்துறை இயங்கி வருகிறது. இத்துறை அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைப்பதோடு, மாநில மற்றும் ஒன்றிய அரசின் பிற துறைகளையும் தொடர்பு கொள்வது போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு இல்லம், புதுதில்லி, தமிழகம் விருந்தினர் இல்லம். உதகமண்டலம், மாநில விருந்தினர் இல்லம், சேப்பாக்கம், புதிய அரசு விருந்தினர் இல்லம், ஓமந்தூரார், அரசு ஓய்வு இல்லம், சிந்தாதிரிப்பேட்டை, சென்னை மற்றும் தலைமைச் செயலக கட்டிட பராமரிப்பு பணிகளை பொதுத்துறை மேற்கொள்கிறது.

மாவட்டங்களில் சட்டம்-ஒழுங்கு தொடர்பான பிரச்சினைகள், மாவட்ட நீதிபதிகளின் நியமனம், உயர்நீதிமன்ற சட்ட அலுவலர்களின் நியமனம்,

அயலகத் தமிழர்களின் நலன், இலங்கைத் தமிழர்களின் நலன், "மனித உரிமை" பாதுகாப்பு தொடர்பான பணிகளையும் பொதுத் துறையால் கையாளப்படுகிறது.

அண்ணா விருது மற்றும் மத நல்லிணக்கத்திற்காக வழங்கப்படும் கோட்டை அமீர் விருது ஆகியவற்றிற்கு தகுதியானவர்களைத் தேர்ந்தெடுத்து பரிந்துரை செய்கிற பணியை பொதுத்துறை செய்கிறது. ஒன்றிய அரசால் வழங்கப்படும் வீரதீர செயல்களின் விருதுக்கான நபர்களை தேர்ந்தெடுத்து பரிந்துரை செய்கிறது.

பொதுத்துறையானது முன்னாள் படைவீரர்களின் நலனை கவனித்து வருகிறது மற்றும் பாதுகாப்புத் திட்டம் தொடர்பாக நிலம் கையகப்படுத்துதல் மேலும் இராணுவ வீரர்களின் ஆட்சேர்ப்பு தொடர்பான பணிகளுக்கு இத்துறை தனது பங்களிப்பை வழங்குகிறது.

முன்னாள் விடுதலை போராட்ட வீரர்கள் மற்றும் முன்னாள் இந்திய தேசிய இராணுவ படை

வீரர்களுக்கான ஒய்வூதியம் மற்றும் நலத்திட்டப் பணிகளை பொதுத்துறை மேற்கொள்கிறது.

தமிழ்நாட்டின் மூலை முடுக்குகளில் இருப்பவர்களுக்கும், முதல்வரின் முகவரி கலங்கரை விளக்காகத் திகழ்கிறது. மக்கள் தங்கள் குறைகளை தீர்வு காண்பதற்காக மாண்புமிகு முதலமைச்சரின் பார்வைக்காக தங்களுடைய மனுக்களை நேரிடையாக அனுப்புகின்றனர். பொதுத்துறையின் திறமையான வழிக்காட்டுதலின் அடிப்படையில் முதல்வரின் முகவரி இயங்குகிறது. பொதுமக்களிடமிருந்து பெறப்படும் ஒவ்வொரு மனுக்களுக்கும் முக்கியத்துவம் அளித்து பொருத்தமான முறையில் தீர்வு காணும் பொருட்டு அம்மனுக்கள் சம்மந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பப்படுகின்றன.

முக்கியமான முடிவுகளை அரசு மேற்கொள்ளும்போதெல்லாம் அமைச்சரவை கூட்டத்தில் அதை முன்மொழிந்து விவாதித்து முடிவெடுப்பதே நடைமுறை. அமைச்சரவை

கூட்டங்களைத் திறம்பட நடத்தி கூட்டக் குறிப்புகளை தயாரித்து ஒப்புதல் பெற்று அரசாணைகளாக அவற்றை வெளியிடச் செய்யும் செயலையும் பொதுத்துறையே மேற்கொள்கிறது.

தேசிய பாதுகாப்புச் சட்டம் 1980, அந்நிய செலாவணி பாதுகாப்பு, கள்ளக்கடத்தல் நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் 1974–ஐ நடைமுறைப்படுத்துதல் மற்றும் சட்டம்–ஒழுங்கு தொடர்பான விசாரணை ஆணையங்களை அமைக்கும் பணியையும் பொதுத்துறை மேற்கொள்கிறது.

இவை தவிர மற்ற துறைகளால் ஒதுக்கப்படாத எந்தப் பணியாக இருந்தாலும் அதை நிறைவேற்றுகின்ற பணியை சிரமேற்கொண்டு பொதுத்துறை செய்து வருகிறது.

## 2. தமிழ்நாட்டிற்கு வருகைபுரிந்த மிக முக்கிய விருந்தினர்கள், அயல்நாட்டுத் தூதுவர்கள்

மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர், மாண்புமிகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர், மாண்புமிகு இந்தியப் பிரதமர், வெளிநாட்டு அரசின் தலைமைப் பொறுப்பு வகிக்கும் பிரமுகர்கள், வெளிநாட்டு அமைச்சர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள் / உயர் ஆணையர்கள் ஆகியோர் தமிழ் நாட்டுக்கு வருகை புரியும் போது மரபு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பொது (மரபு)த் துறையால் செய்யப்படுகின்றது. மேலும் மாண்புமிகு ஆளுநர், மாண்புமிகு முதலமைச்சர், தலைமைச் செயலாளர் ஆகியோருடன் வெளிநாட்டு அமைச்சர்கள் / தூதுவர்கள் / முக்கிய பிரமுகர்களுக்கு சந்திப்பு ஏற்பாடுகள் ஒன்றிய அரசின் வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் இசைவுடன் செய்யப்படுகின்றது.

2023ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 2024 மார்ச் மாதம் வரை தமிழ் நாட்டிற்கு வருகை புரிந்த முக்கிய தகைசால் பெருமக்களின் விவரம் பின்வருமாறு:–

| மிக மிக முக்கிய நபர்களின் விவரம் | வருகையின் எண்ணிக்கை |
|---|---|
| மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் | 2 |
| மாண்புமிகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் | 2 |
| மாண்புமிகு இந்தியப் பிரதமர் | 7 |
| வெளிநாட்டு முக்கிய தகைசால் பெருமக்கள் | 5 |

2023ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 2024 மார்ச் மாதம் வரை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை சந்தித்த முக்கிய பிரமுகர்களின் விவரம் பின்வருமாறு:–

| மிக மிக முக்கிய நபர்களின் விவரம் | வருகையின் எண்ணிக்கை |
|---|---|
| வெளிநாட்டு தூதுவர்கள் | 2 |
| வெளிநாட்டு அமைச்சர் / ஆளுநர் | 3 |
| வெளிநாட்டு துணைத் தூதுவர்கள் | 2 |
| சர்வதேச அமைப்பாளர் | 1 |

## 3. தேசிய விழாக்கள், சிறப்பு நாட்கள் மற்றும் பொது விடுமுறை அறிவிப்பு; விருதுகள்

### 3.1. தேசிய விழாக்கள், சிறப்பு நாட்கள் மற்றும் விருதுகள்

இந்திய தேசிய விழாக்களான **"சுதந்திரத் திருநாள்"** மற்றும் **"குடியரசுத் திருநாள்"** விழாக்களை, மாநில அளவில் நாட்டுப் பற்றுடன் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைப் பொது (பொது–I)த் துறை செய்கிறது. ஒவ்வொரு ஆண்டும், குடியரசு நாள் விழா அன்று, சென்னை மெரினா கடற்கரையில் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைப்பதற்கான ஏற்பாடுகள், அலங்கார அணிவகுப்பு மற்றும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளையும் இத்துறை செய்கிறது. மேலும், சுதந்திரத் திருநாள் விழாவின் போதும், சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள கோட்டை கொத்தளத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றிவைக்கும்

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளையும் இத்துறை மேற்கொள்கிறது.

ஒன்றிய அரசால் சிறப்பு நாளாக அறிவிக்கப்பட்டுள்ள **"தியாகிகள் தினத்தன்றும்"**, தமிழ்நாடு அரசால் சிறப்பு நாளாக அறிவிக்கப்பட்டுள்ள **"சமூகநீதி தினத்தன்றும்"**, தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள இராணுவ அணிவகுப்பு மைதானத்தில், மாண்புமிகு அமைச்சர்கள், துறைச் செயலாளர்கள் மற்றும் தலைமைச் செயலக அலுவலர்கள் அனைவருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உறுதிமொழியேற்பு செய்து வைக்கும் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளும் இத்துறையால் செய்யப்படுகின்றது. மேலும் இவ்வாண்டு முதல் சமூகநீதி நாளன்று எல்லை கடந்து சென்று வைக்கத்தில் போராடிய தந்தை பெரியார் அவர்களை நினைவுகூறும் வகையில், பிற மாநிலங்களில் ஒடுக்கப்பட்டவர்கள் நலனுக்காகப் பாடுபட்டு, குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தும் ஆளுமைகள் அல்லது நிறுவனங்களில் ஒருவருக்கு **"வைக்கம் விருது"** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படும். மேலும்,

அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய பிறந்த நாளான ஏப்ரல் திங்கள் 14–ஆம் நாள் அன்று, ஆண்டுதோறும் தலைமைச் செயலகம் தொடங்கி, அனைத்து அரசு அலுவலகங்களிலும் **"சமத்துவ நாள்"** உறுதிமொழி எடுக்கப்பட்டு வருகிறது.

மாநில அரசின் விருதுகளில் ஒன்றான வீர தீரச் செயலுக்கான **"அண்ணா பதக்கம்"** வழங்குவது குறித்த பணியையும் இத்துறை மேற்கொள்கிறது. இவ்விருதுக்கான விண்ணப்பங்கள் **awards.tn.gov.in** என்ற இணையதளம் வழியாக பெறப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்களால் பரிசீலிக்கப்பட்டு, பரிந்துரை செய்யப்படும் விண்ணப்பங்களில், தேர்வுக்குழுவினரால் தேர்வு செய்யப்படும் விண்ணப்பங்கள் குறித்து புலனாய்வுத் துறையின் அறிக்கை பெறப்பட்டு, அதனடிப்படையில் விருதாளர்களைத் தெரிவு செய்வதற்கான பணியையும் இத்துறை மேற்கொள்கிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கும் போது, மாவட்ட ஆட்சியர்கள் / காவல் / வன அலுவலர்கள் மாநாட்டை ஒருங்கிணைத்து நடத்துவது இத்துறையின் பொறுப்பாகும். கடந்த

ஆண்டு அக்டோபர் 2023–ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் மாவட்ட ஆட்சியர்கள் / காவல் / வன அலுவலர்கள் மாநாடு நடத்தப்பட்டது.

மேலும், ஒன்றிய அரசால் வழங்கப்படும் விருதுகளான பத்மவிபூஷண், பத்மபூஷண், பத்மஸ்ரீ, ஜீவன்ரக்க்ஷா பதக்கம், அசோக் சக்ரா, கீர்த்தி சக்ரா, சௌர்ய சக்ரா, சர்தார் படேல் தேசிய ஒற்றுமை விருது, மத நல்லிணக்கத்திற்கான கபீர் புரஸ்கர் விருது, காந்தியடிகள் அமைதி பரிசு போன்ற விருதுகளுக்கான பரிந்துரைகள் இத்துறையின் மூலம் ஒன்றிய அரசுக்கு அனுப்பப்படுகின்றன.

## 3.2. பொது விடுமுறை அறிவிப்பு

மாநிலத்தின் பொது விடுமுறை தொடர்பான அறிவிப்புகள் செலாவணி முறிச்சட்டம் 1881–ன் கீழ் இத்துறையால் அறிவிக்கப்படுகிறது. 1957–ஆம் ஆண்டில் ஒன்றிய அரசால், மாநில அரசுகள் தத்தம் மாநிலங்களுக்குச் செலாவணி முறிச்சட்டம், 1881–ன் கீழ் பொது விடுமுறை நாட்கள் அறிவிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

செலாவணி முறிச்சட்டம் 1881–ன்படி, கீழ்காணும் அதிகார அமைப்புகளிடமிருந்து அறிக்கைப் பெற்று, அதன் அடிப்படையில் பொது விடுமுறை நாட்களின் பட்டியல் முடிவு செய்து ஒவ்வொரு ஆண்டும் அரசு ஆணை வெளியிடப்படுகிறது:–

ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, தமிழக அரசின் தலைமைக் காஜி, தென்னிந்தியக் கிறிஸ்துவ திருச்சபையின் மதராஸ் மறை மாவட்டப் பேராயர், மயிலாப்பூரில் உள்ள மதராஸ் மறை மாவட்டப் பேராயர், பாரத ரிசர்வ் வங்கி, சென்னை, வான் கோளியல் மையம் இந்திய வானிலை ஆய்வுத் துறை, கொல்கத்தா, இந்திய வானியற்வியல் நிறுவனம், பெங்களூரு, தென்னிந்திய வர்த்தக மற்றும் தொழில் சபை, சென்னை மற்றும் பகவான் மகாவீர் அகிம்சா பிரச்சார சங்கம், சென்னை.

# 4. அரசு விருந்தினர் இல்லங்கள்

அரசு விருந்தினர் இல்லம், சேப்பாக்கம், புதிய அரசு விருந்தினர் இல்லம், ஓமந்தூரார் தோட்டம், அரசு ஓய்வு இல்லம், சிந்தாதிரிப்பேட்டை, சென்னை, தமிழகம் அரசு விருந்தினர் இல்லம், உதகமண்டலம், வைகை தமிழ்நாடு இல்லம், பொதிகை தமிழ்நாடு இல்லம், புதுதில்லி ஆகிய அரசு விருந்தினர் இல்லங்கள் பொதுத்துறையின் கட்டுப்பாட்டில் செயல்படுகின்றன.

## 4.1. அரசு விருந்தினர் இல்லம், சேப்பாக்கம், சென்னை

சென்னை, சேப்பாக்கத்திலுள்ள அரசு விருந்தினர் இல்லம் 7 அறைகளுடன் 1970 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. அதனைத் தொடர்ந்து, 1983 ஆம் ஆண்டு கூடுதல் கட்டடங்கள் பழைய விருந்தினர் இல்லத்தின் அருகே கட்டப்பட்டு விரிவுபடுத்தப்பட்டது. அரசு விருந்தினர் இல்லத்தில்

33 அறைகளில் 6 தொகுப்பு அறைகள், 11 சொகுசு அறைகள், 16 நிலையான அறைகள் உள்ளன. இவ்வில்லத்தில் தற்போது சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றது. வரவேற்பு அலுவலர் (இணை மாநில மரபு அலுவலர்) இவற்றின் நிருவாகத்தைப் பொறுப்பேற்று நடத்துகின்றார்.

**4.2. புதிய அரசு விருந்தினர் இல்லம், ஓமந்தூரார் தோட்டம், சென்னை.**

சென்னை, ஓமந்தூரார் தோட்டம், புதிய அரசு விருந்தினர் இல்லமானது, 2018–ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இவ்வில்லத்தில் 40 சொகுசு அறைகள், 4 சிறிய கூட்டரங்கங்கள், 1 பெரிய கூட்டரங்கம், 1 உணவு அருந்தும் அறை மற்றும் நவீன உடற்பயிற்சிக் கூடம் ஆகியவை அமைந்துள்ளன. வரவேற்பு அலுவலர் (இணை மாநில மரபு அலுவலர்) இவற்றின் நிருவாகத்தைப் பொறுப்பேற்று நடத்துகின்றார்.

அரசு விருந்தினர் இல்லம், சேப்பாக்கம், புதிய அரசு விருந்தினர் இல்லம், ஓமந்தூரார் தோட்டம் ஆகிய விருந்தினர் இல்லங்களில் அரசு விருந்தினர்கள் மற்றும் தொகை தரு விருந்தினர்கள் தங்குவதற்கு www.sgh.tn.gov.in என்னும் இணையத்தின் வலைதளப்பக்கத்தின் வாயிலாக முன் பதிவினைச் செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**4.3. அரசு ஓய்வு இல்லம், சிந்தாதிரிப்பேட்டை, சென்னை**

சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள அரசு ஓய்வு இல்லம், சென்னைக்கு வருகைபுரியும் இளநிலை அரசு அலுவலர்கள் தங்குவதற்காக 25 அறைகளுடன் 1981–ஆம் ஆண்டு கட்டப்பட்டது. புதிய அரசு ஓய்வு இல்லம் கட்டும் பணி 2021–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 21.02.2024 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் காணொலி காட்சி மூலம் திறந்துவைக்கப்பட்டது. இதில் 55 நிலையான அறைகள், 4 சொகுசு

அறைகள், உணவு அருந்தும் கூடம், சமையல் அறை, அலுவலக அறை ஆகியவை கொண்டிருக்கும்.

## 4.4. அரசு விருந்தினர்கள் மற்றும் தொகை தரு விருந்தினர்கள்:

### 4.4.1. அரசு விருந்தினர்கள்

தமிழகத்திற்கு வருகை தரும் மிக முக்கிய, முக்கியப் பிரமுகர்கள், மாண்புமிகு குடியரசுத்தலைவர், மாண்புமிகு குடியரசுத்துணைத் தலைவர், மாண்புமிகு பாரதப்பிரதமர், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி, பிற மாநில ஆளுநர்கள், முன்னாள் குடியரசுத்தலைவர், முன்னாள் குடியரசுத் துணைத்தலைவர், முன்னாள் பாரதப்பிரதமர், மக்களவையின் சபாநாயகர், துணை சபாநாயகர், ஒன்றிய அமைச்சர்கள், மக்களவை மற்றும் மாநிலங்களவையின் எதிர் கட்சித்தலைவர், பிற மாநில முதலமைச்சர்கள், அமைச்சர்கள், நிதி ஆயோக் துணைத்தலைவர், பிற மாநில

சபாநாயகர்கள், துணைச் சபாநாயகர்கள், இந்திய தலைமைக் கணக்குத் தணிக்கையாளர், ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்ட ஆணையத்தின் தலைவர்கள் / உறுப்பினர்கள், அயல் நாட்டுப் பிரமுகர்கள், மாண்புமிகு உச்ச நீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகள், ஒன்றிய அரசின் செயலாளர்கள் ஆகிய அனைவரும் அரசு விருந்தினர்களாக கருதப்பட்டு அவர்களுக்கு வரவேற்பு, உணவு, மருத்துவச் சேவை, தொலைபேசி கட்டணம், போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. பாதுகாப்பு வசதிகள் ஒன்றிய அரசின் உள்துறை நிர்ணயித்துள்ள பட்டியலின்படி கொடுக்கப்படுகின்றன.

### 4.4.2. தொகை தரு விருந்தினர்கள்

மரபு கையேட்டின்படி, அரசு விருந்தினர் பிரிவின் கீழ் வராதவர்கள் தொகை தரு விருந்தினர்களாக கருதப்படுவர். கட்டணம் செலுத்துதல் அடிப்படையில், தங்கும் வசதி,

போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன.

**4.5. தமிழகம் அரசு விருந்தினர் இல்லம், உதகமண்டலம்**

"அரண்மோர் அரண்மனை" என்று அறியப்பட்ட உதகமண்டலத்திலுள்ள தமிழகம் விருந்தினர் மாளிகையானது ஜோத்பூர் மகாராஜாவால் 1925–ஆம் ஆண்டு கட்டப்பட்டது. 1958–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28–ஆம் நாள் இவ்வரண்மனை தமிழ்நாடு அரசால் ரூ.5.5 இலட்சத்திற்கு விலைக்கு வாங்கப்பட்டு விருந்தினர் மாளிகையாக மாற்றப்பட்டது. தமிழகம் விருந்தினர் மாளிகையானது மிக இரம்மியமான சூழலில் உதகமண்டலம் இரயில் நிலையம் மற்றும் மத்திய பேருந்து நிலையத்திலிருந்து 2.8 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

2. கலைநயம் மிக்க கட்டிடம், அழகிய பூங்கா நிலப்பரப்பு மற்றும் கண்கவர் மரங்கள் பழமையான மரச்சாமான்கள் ஆகியவை இவ்விருந்தினர் மாளிகைக்குள் உள்ளடங்கியவை. இம்மாளிகை 36 ஏக்கர் நிலப்பரப்பு கொண்டது. இம்மாளிகையில் உள்ள அழகிய பூங்கா தோட்டக்கலைத் துறையால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

3. மிகமுக்கிய விருந்தினர்கள், அமைச்சர் பெருமக்கள், நீதி அரசர்கள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் உதகைக்கு அலுவல் நிமித்தமாக வரும் அரசு அலுவலர்கள் ஆகியோருக்கு தங்குமிடம் அளிப்பதற்காகவே இவ்விருந்தினர் மாளிகையை அரசு விலைக்கு வாங்கியதற்கு முக்கிய காரணமாகும். அரசின் மானியத்தின் மூலம் இவர்களுக்கு தங்குமிடம் சலுகை கட்டணத்தில் அனுமதி அளிக்கப்படுகிறது. தலைமை நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், பிற மாநில நீதிபதிகளும் இங்கு தங்குகின்றனர்.

4. இவ்விருந்தினர் இல்லத்தில் தங்குவதற்கு அறை ஒதுக்கீடு தொடர்பான ஒப்புதல் அரசு துணைச் செயலாளர் (மரபு) அவர்களால் வழங்கப்படுகிறது.

**<u>இவ்விருந்தினர் இல்லத்தில் உள்ள அறைகள் விவரம்</u>**

| வ. எண். | அறைகள் | அறைகளின் எண்ணிக்கை | படுக்கைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | முக்கிய அறைகள் | 18 | 38 |
| 2. | அறைகள் | 20(14x2=28)+(6x4=24) | 52 |
| 3. | துயில் கூடம் | 2 | 16 |
| | மொத்தம் | 40 | 106 |

**விருந்தினர் வருகை விபரம் 01.04.2023 முதல் 31.03.2024 வரை**

| | | | |
|---|---|---|---|
| 1. | அரசு விருந்தினர்கள் | - | 1 |
| 2. | மொத்த விருந்தினர்கள் | - | 5855 |

இவ்விருந்தினர் மாளிகையில் அழகிய அவைக்கூடம் ஒன்று உள்ளது. இந்த அவைக்கூடத்தில் 200 பேர் அமரக்கூடிய வசதி உள்ளது மற்றும் 30 பேர் அமரக்கூடிய வசதி கொண்ட சிறிய அவைக்கூடம்

ஒன்று உள்ளது. தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையின் பல்வேறு குழுக்களின் ஆய்வு கூட்டங்கள் மற்றும் கருத்தரங்கங்கள் அவைக் கூடத்தில் நடத்தப்படுகின்றன. இவ்விருந்தினர் மாளிகையில் உள்ள அனைத்து அறைகளுக்கும் தொலைபேசி இணைப்பு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### 4.6. தமிழ்நாடு இல்லம், புதுதில்லி

புதுதில்லியின் மிக முக்கிய பகுதியில் அமைந்துள்ள தமிழ்நாடு இல்லமானது தமிழ்நாடு அரசினுடைய பெருமையை பறைசாற்றும் மதிப்புமிக்க மாநில விருந்தினர் இல்லமாக செயல்பட்டு வருகிறது. புது தில்லி, சாணக்யபுரி, கௌடில்ய மார்க், எண்.6–இல் 1962 ஆம் ஆண்டில் 1.757 ஏக்கர் நிலப்பரப்பில் தமிழ்நாடு இல்லம் கட்டப்பட்டது. அதன் தொடர்ச்சியாக. புதுதில்லி, சாணக்யபுரி, திக்கேந்திரஜித் மார்க் எண். 9–இல் 1.96 ஏக்கர் நிலப்பரப்பில் கூடுதல் விருந்தினர் மாளிகை கட்டப்பட்டு 16.09.2004 முதல் செயல்பாட்டில்

உள்ளது. இவை முறையே, "வைகை தமிழ்நாடு இல்லம்" என்றும் "பொதிகை தமிழ்நாடு இல்லம்" என்றும் அழைக்கப்படுகிறது.

தமிழ்நாடு இல்லத்தில் மாண்புமிகு ஆளுநர், மாண்புமிகு முதலமைச்சர், உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி, நீதிபதிகள், மாண்புமிகு அமைச்சர்கள், மக்கள் பிரதிநிதிகள், மாநில மற்றும் ஒன்றிய அரசு அதிகாரிகளுக்கு தங்குமிடம், உணவு மற்றும் போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டு வருகிறது. இவர்கள் அல்லாது மற்றவர்களுக்கும் அரசின் முன் ஆணையின்படி தங்குவதற்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

தமிழ்நாடு இல்லத்தில் அறை ஒதுக்கீடுகள் மற்றும் பணிகள் அரசு தலைமைச் செயலாளர், பொதுத் துறை அவர்களின் முழுக்கட்டுப்பாட்டில் உள்ளது. தமிழ்நாடு இல்ல நிர்வாகம் மற்றும் செயல்பாடுகள் சென்னை, தலைமைச் செயலக பொதுத் துறையின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் முதன்மை

உள்ளுறை ஆணையர் அவர்களால் மேற்கொள்ளப்படுகிறது.

**தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி:–**

புதுதில்லியில் தமிழ்நாடு இல்லத்தில் உள்ள அரசின் சிறப்பு பிரதிநிதி, ஒன்றிய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே இணைப்பாக செயல்பட்டு புதுதில்லியில் நடைபெறும் கூட்டங்களில் மாநில அமைச்சர்கள் பங்கேற்க இயலாத சூழலில் தமிழ்நாடு அரசின் சார்பில் பங்கேற்று தமிழ்நாடு அரசின் கருத்துக்களைத் தெரிவிப்பார்.

**தமிழ்நாடு இல்லத்திலுள்ள வசதிகள் மற்றும் வழங்கப்படும் சேவைகள்:–**

1. தங்குமிடம் மற்றும் உணவு வழங்குதல்.
2. தகுதியான விருந்தினர்களுக்கு போக்குவரத்து ஏற்பாடுகள்.
3. விருந்தினர்களின் வசதிக்காக தேவையான உபகரணங்களுடன் கூடிய வணிக மையம்.

4. அனைத்து விருந்தினர் அறைகளிலும் கட்டணமில்லா கம்பியில்லாத இணையத் தொடர்பு வசதி.
5. நவீன ஒலி, ஒளி கருவிகளுடன் 90 பார்வையாளர்கள் அமரும் வசதிகொண்ட கலையரங்கம்.
6. தமிழ்நாடு இல்லத்திற்கென வலைத்தளம் https://tnhouse.tn.gov.in உருவாக்கப்பட்டுள்ளது.
7. ஒன்றிய அரசிற்கு அனுப்பப்படும் தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளின் முன்மொழிவுகள் மற்றும் திட்டங்களை கண்காணிக்க PPMS எனும் மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது https://tnhouse.tn.gov.in.ppms.

தமிழ்நாடு இல்லத்தை நிர்வகிப்பதற்கு பல்வேறு பிரிவுகள் உள்ளன. அவை பின்வருமாறு;–

(அ) வரவேற்பு பிரிவு

(ஆ) உணவகப்பிரிவு

(இ) இல்லப்பராமரிப்பு பிரிவு

(ஈ) பொறியியல் பிரிவு

(உ) பணியமைப்பு பிரிவு

(ஊ) நிதிப் பிரிவு

(எ) தொடர்பு பிரிவு

**சட்டப் பிரிவு**

தமிழ்நாடு இல்லத்திலுள்ள சட்டப்பிரிவு, தமிழ்நாடு அரசின் உள்துறையால் அமைக்கப்பட்டு, மாநில அரசின் வழக்குகளை உச்ச நீதிமன்றத்தில் பதிவு பெற்ற வழக்குரைஞர்கள் (Advocates on Record) மற்றும் புதுதில்லி சார்ந்த கூடுதல் தலைமை வழக்குரைஞர்களைக் கொண்டு (Additional Advocate General)அரசின் சார்பாக உச்சநீதிமன்றம், உயர் நீதிமன்றம், தேசிய பசுமை தீர்ப்பாயம், மற்ற தீர்ப்பாயங்கள் மற்றும் இதர நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகள் கையாளப்படுகின்றன.

**தமிழ் பண்பாட்டு இல்லம்**

இந்திய தேசிய தலைநகர் மண்டலப்பகுதியில் வாழும் சுமார் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்களை ஒருங்கிணைத்து தமிழ் கலாச்சாரம் மற்றும் மரபுகளை பகிர்வதற்கு புதுதில்லி தமிழ்நாடு இல்லத்தில் தமிழ் பண்பாட்டு இல்லம் 1983–ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது.

**தமிழ்நாடு இல்லத்தால் நடத்தப்படும் கலாச்சார மற்றும் பாரம்பரிய நடவடிக்கைகள்**

**அ. பொங்கல் விழா**

தமிழ்நாடு இல்லம், புதுதில்லியில் 1983–ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் நடைபெற்ற பொங்கல் விழா போன்ற கலைவிழாக்கள் 2009–ஆம் ஆண்டு முதல் அதிகாரப்பூர்வமாக தமிழ் கலை மற்றும் பண்பாட்டையும், பாரம்பரியத்தையும் பிரதிபலிக்கும் வண்ணம் புதுதில்லி தேசிய தலைநகர் மண்டலத்தில் நடத்தப்படுகிறது.

### ஆ. தமிழ் பண்பாட்டு வகுப்பு

தஞ்சாவூர், தமிழ் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் அவர்களுடன் புதுதில்லி முதன்மை உள்ளுறை ஆணையர் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் தமிழ் மொழி, தமிழ் இசை (வாய்ப்பாட்டு) மற்றும் பரதநாட்டியம் போன்ற தமிழ் பண்பாட்டு வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

### இ. ஓவிய பயிலரங்கம்

தமிழ் பண்பாட்டு இல்லம், சென்னை அரசு கவின் கல்லூரியின் ஆதரவுடன் பள்ளி விடுமுறை நாட்களில் இலவச ஓவிய பயிலரங்கம் ஒன்றை கலைப் பண்பாட்டுத் துறை இயக்குனரகத்தின் மூலம் நடத்தி வருகிறது. பங்கேற்பு சான்று வழங்கப்படுகிறது.

## தமிழ்நாடு இல்லத்திற்கு கூடுதல் விருந்தினர் மாளிகை (3–வது விருந்தினர் மாளிகை) கட்டுவதற்கு நிலம் ஒதுக்கீடு

மூன்றாவது விருந்தினர் இல்லம் கட்டுவதற்காக டெல்லி வளர்ச்சி

குழுமத்தால் (Delhi Development Authority) புதுதில்லியில் உள்ள துவாரகாவில் 3197.58 சதுர மீட்டர் நிலம் தொடரில்லா செலவினம் ரூ.25,19,33,739/- நிரந்தர குத்தகைக்கும் ஆண்டுதோறும் நில வாடகையாக ரூ.62,98,342/-ம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண்.689, பொது (பொது.2)த் துறை, நாள் 20.10.2022 மற்றும் அரசாணை (நிலை) எண்.737, பொது (பொது.2)த் துறை, நாள் 02.11.2022-இன் மூலம் நிரந்தர வருடாந்திர நில வாடகை மற்றும் குத்தகை தொகைக்கான நிர்வாகம் மற்றும் நிதி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**புதுதில்லி வைகை தமிழ்நாடு இல்லத்தில் மறுசீரமைப்புப் பணி**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 18.06.2021 அன்று வருகை புரிந்தபோது வைகை தமிழ்நாடு இல்ல மறுமேம்பாட்டு திட்டத்தினை ஆய்வு செய்து, விரிவான ஆலோசனை கூட்டத்திற்கு பிறகு வைகை தமிழ்நாடு இல்லத்தை முற்றிலுமாக

இடித்துவிட்டு புதிய கட்டிடம் கட்ட முடிவு செய்யப்பட்டது.

அதன்படி அரசாணை (நிலை) எண்.512, பொது (பொது.2)த் துறை, நாள் 18.08.2023 மூலம் ரூ.257 கோடிக்கு வைகை தமிழ்நாடு இல்லத்தை இடித்து கட்டுவதற்கு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. வைகை தமிழ்நாடு இல்லம், முன்மொழியப்பட்ட மறுசீரமைப்பு திட்டமானது கீழே கூறப்பட்டுள்ள தொகுதிகளைக் கொண்டுள்ளது:–

| வ. எண் | தொகுதி | தளங்களின் எண்ணிக்கை | மொத்த தளப்பரப்பளவு | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | மிக முக்கிய விருந்தினர் தொகுதி | 3 அடித்தளங்கள் +தரைத்தளம்+ 6 மேல் தளங்கள் | 8278.00 ச.மீ.(அ) 89,071 ச.அ | ரூ.96.52 கோடி |
| 2. | விருந்தினர் மாளிகை தொகுதி | 3 அடித்தளங்கள் +தரைத்தளம்+ 6 மேல் தளங்கள் | 11628.09 ச.மீ.(அ) 1,25,118 ச.அ | ரூ.93.60 கோடி |
| 3. | பணியாளர்கள் குடியிருப்புத் தொகுதி | 3 அடித்தளங்கள் +தரைத்தளம்+ 7 மேல் தளங்கள் | 8032.32 ச.மீ.(அ) 86,428 ச.அ | ரூ.66.88 கோடி |
| | **மொத்த திட்ட மதிப்பீடு** | | | **ரூ.257.00 கோடி** |

## 5. அயல்நாட்டினர்

### 5.1. அயல்நாட்டினர் சட்டம், 1946

மாநில அரசுகளுக்கு ஒன்றிய அரசால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, கடவுச்சீட்டு சட்டத்தினை மீறி சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் அயல்நாட்டினர் மற்றும் நுழைவிசைவு (visa) விதிகளை மீறும் அயல்நாட்டினர் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு வெளிவரும் போது, அவர்களது இருப்பினை உறுதி செய்யும் வகையில் அயல்நாட்டினர் சட்டம், 1946–இன் கீழான விதிகளின்படி திருச்சிராப்பள்ளி சிறப்பு முகாமில் தங்கவைக்கப்பட்டு, அச்சட்டத்தின்படி இந்தியாவிலிருந்து திருப்பி அனுப்பப்படுகின்றனர்.

2023 ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2024 மார்ச் 31–ஆம் நாள் வரை 97 அயல்நாட்டினர் அவர்தம் தாய்நாட்டிற்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

**5.2.பாகிஸ்தான் நாட்டவர்களின் தங்கும் காலத்தை நீட்டித்தல், நுழைவிசைவு வசதியுடன் தாய்நாடு சென்றுவர அனுமதித்தல்**

இந்தியாவில் தங்கியிருக்கும் பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த குடிமக்களின் தங்கும் காலத்தை நீட்டிப்பதற்கும், தங்களது தாய்நாட்டிற்கு நுழைவிசைவு வசதியுடன் சென்றுவருவதற்கும் மண்டல அயல்நாட்டு பதிவு அலுவலக இணையமுகப்பு (IVFRT) மூலமாக நுழைவிசைவு கையேட்டின்படி (Visa Manual) மாநில அரசால் அனுமதி வழங்கப்படுகிறது.

**5.3. தாய்நாடு திரும்ப விரும்பும் இலங்கைத் தமிழர்களுக்கு நுழைவிசைவுக் கட்டணம் / மிகைத் தங்கல் தண்டத் தொகை விலக்களித்தல்**

தமிழ்நாட்டில் 09.01.2015க்கு முன்பே வருகை புரிந்து தங்கியிருக்கும் இலங்கைத் தமிழர்கள், விருப்ப அடிப்படையில் தங்களது தாய்நாட்டிற்குத் திரும்ப விண்ணப்பிக்கும் போது, அரசிற்குச் செலுத்த

வேண்டிய நுழைவிசைவுக் கட்டணம், மிகைத்தங்கல் தண்டத் தொகை ஆகியவற்றை ஒன்றிய அரசால் அமைக்கப்பட்ட குழு, ஒவ்வொரு நேர்வாகப் பரிசீலித்து பரிந்துரைத்த பின், அத்தொகை செலுத்துவதிலிருந்து, விலக்களிக்கப்படுகிறது.

2023 ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2024, மார்ச் 31–ஆம் நாள்வரை 71 இலங்கைத் தமிழர்களுக்கு தங்கள் தாயகம் திரும்ப செலுத்த வேண்டிய நுழைவிசைவுக் கட்டணம் மற்றும் மிகைத்தங்கல் கட்டணமாக ரூ.62,71,200/– விலக்களிக்கப்பட்டுள்ளது.

### 5.4. "இ–சனட்" இணையதளம் வழியாக சான்றொப்பமிடுதல் மற்றும் சர்வதேச சான்றளித்தல்

நேரடி தொடர்பற்ற மற்றும் காகிதமற்ற முறையில் முத்திரையிடும் சேவை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு ஒன்றிய வெளியுறவுத்துறை

அமைச்சகத்தால் உருவாக்கப்பட்ட "இசனட்" http://esanad.nic.in என்ற இணையதள முகப்பில், தேசியத் தகவல் தொடர்பு மையம் (National Informatics Centre) மூலமாக அரசு துறைகள், தன்னாட்சி அமைப்புகள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், பல்கலைக் கழகங்கள், தமிழ்நாட்டிலுள்ள தேசிய கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றை மாநில அளவில், பொதுத்துறையானது இவ்விணையதளத்தில் ஒருங்கிணைத்து சேவை வழங்கி வருகிறது. இவ்வதிகார அமைப்புகளால் வழங்கப்படும் ஆவணங்கள், வெளிநாடுகளில் கல்வி பயில்வது, பணிபுரிவது, குடும்பத்தினருடன் இணைவது உள்ளிட்ட நேர்வுகளுக்காக அயல்நாட்டுத் தூதரகங்களில், சமர்ப்பிக்க வேண்டி இவ்விணையம் வழியாக விண்ணப்பிக்கும் போது இணையதளம் மூலமாகவே சரிபார்க்கப்பட்டு மாநில அரசால் சான்றொப்பமும், ஒன்றிய அரசால் சர்வதேச சான்றளிப்பும் மேற்கொள்ளப்படுகிறது.

இச்சேவை முறையில் 2023 ஏப்ரல் முதல் நாளிலிருந்து 2024, மார்ச் 31–ஆம் நாள்வரை 14,264 ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு சான்றொப்பமிடப்பட்டுள்ளன.

## 6. முதல்வரின் முகவரித் துறை

பொது மக்கள் குறைகளை தீர்ப்பதில் இவ்வரசு முன்னுரிமை அளித்து வருகிறது. அதன்படி, குறைதீர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ள அனைத்து அமைப்புகளையும் ஒன்றிணைத்து, அமைப்பை மேலும் வலுப்படுத்தும் வகையில் "**முதல்வரின் முகவரித் துறை**" என்ற புதிய துறை 3.11.2021 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் உருவாக்கப்பட்டது.

பொது மக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் துறையினரால் கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டு உரிய முறையில் தீர்வு காணப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேரடிக் கண்காணிப்பின்

கீழ் உள்ள இத்துறையில் அவ்வப்போது ஆய்வு கூட்டங்கள் நடத்தி மனுக்களின் தீர்வு குறித்தான நடவடிக்கைகளை பொதுமக்களிடமே காணொளி மூலம் தொடர்பு கொண்டு உறுதிசெய்து புத்துணர்ச்சி அளித்து வருகிறார்கள். மேலும், பெறப்பட்ட அனைத்து மனுக்களும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு மாதந்தோறும் ஆய்வு கூட்டங்கள் வழியாக அனைத்து மாவட்ட நிலையிலான அலுவலர்களைத் தொடர்பு கொண்டு சிறப்பான முறையில் தீர்வு காண கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மாநில அளவில் செயலாளர்கள் மற்றும் துறைத்தலைவர்கள், மாவட்ட அளவில் ஆட்சியர்களாலும் அவ்வப்போது மறு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. அரசு தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் மாதந்தோறும் நடைபெறும் "அனைத்து செயலாளர்கள் கூட்டங்கள்" வழியாக மனுக்கள் மீது சிறப்பாகவும் மற்றும்

சரியான முறையில் தீர்வு காணுமாறு அனைத்து துறை அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டு, உரிய தீர்வு கிடைக்கும் வகையில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு கண்காணிப்பட்டு வருகிறது.

துறைகள் அளிக்கும் பதில் மற்றும் நடவடிக்கையின் தரத்தை மதிப்பீடு செய்வதற்கு முதலமைச்சரின் உதவி மையம் மற்றும் மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரகங்களில் தரக்கண்காணிப்பு பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரங்கள் குறித்து சம்பந்தப்பட்ட மனுதாரர்களை, மாவட்ட ஆட்சியர் / மாவட்ட அளவிலான அலுவலர்கள் / துறை தலைவர்கள் நேரடியாகவோ அல்லது தொலைபேசி வழியாகவோ தொடர்பு கொண்டு மனுக்கள் உரிய முறையில் தீர்வு காணப்படுகிறதா என்பதையும் கண்காணிக்கிறார்கள்.

07.05.2021 முதல் 31.05.2024 வரை இத்துறையில் பெறப்பட்ட மனுக்கள் மற்றும் தீர்வு செய்யப்பட்ட மனுக்களின் விவரங்கள் பின்வருமாறு:–

| வ. எண் | நாள் | பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | தீர்வு செய்யப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | 07.05.2021 முதல் 31.05.2024 | 27,30,620 | 26,84,834 |

**6.1. 'மக்களுடன் முதல்வர் திட்டம்'**

**மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள் பொது மக்களுக்கு அரசு அலுவலர்கள் ஆற்றி வரும் சேவைகளை மேம்படுத்தும் முயற்சியின் மற்றொரு மைல்கல்லாக **'மக்களுடன் முதல்வர்'** என்ற புதிய திட்டத்தை தொடங்கியுள்ளார்கள்.

பொதுமக்கள் அரசு அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியமின்றி பெரும்பாலான அடிப்படை சேவைகள் இணையதளம் வழியாக

வழங்கப்பட்டு வந்தாலும் சில அரசாங்க சேவைகளைப் பெறும்போது அடித்தட்டு மக்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்த தெளிவின்மை, நேரடியாக வழங்கப்படும் சேவைகளில் உள்ள தாமதங்கள், தேவையான ஆவணங்களைப் பதிவேற்றுவது, நடைமுறை அம்சங்களை தெரிந்துகொள்வதில் உள்ள சிரமங்கள், தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் உள்ள குறைவான புரிதல் சிரமங்களை எதிர்கொள்வது தெரியவந்ததால் அவற்றை சரி செய்யவும் சேவைகளை எளிதில் கிடைக்கப்பெறவும் 'மக்களுடன் முதல்வர்' என்ற புதிய திட்டம் தொடங்கப்பட்டு அதன் வாயிலாக பொதுமக்கள் அதிகமாக அணுகும் 13 அரசு துறைகள் சார்ந்த கோரிக்கைகளைப் பெற்று 30 தினங்களுக்குள் தீர்வுகாணும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேரடி கண்காணிப்பில் அனைத்து நகர்ப்புற கிராமப்புற உள்ளாட்சி அமைப்பு

வார்டுகள், கிராம ஊராட்சிகள், மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், நகர்புறங்களை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகள் மற்றும் ஊரகப்பகுதிகளில் முகாம்கள் 18.12.2023 முதல் தொடங்கப்பட்டு மனுக்கள் மீது விரைவான நடவடிக்கைகள் மேற்கொண்டும் மற்றும் உரிய முறையில் தீர்வு செய்யப்பட்டு, இத்திட்டத்தின் கீழ் இதுவரை 8.74 இலட்சம் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளன.

நகரப் பகுதிகளில் "மக்களுடன் முதல்வர்" திட்டம் பெரும் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, அதன் தொடர்ச்சியாக அடுத்தகட்டமாக, ஊரகப் பகுதிகளில் மக்கள் அதிகமாக அணுகும் 15 அரசுத்துறைகள் கண்டறியப்பட்டு, அவற்றின் சேவைகள் விரைவாகவும் எளிதாகவும் கிடைக்கச் செய்யும் வகையில் "மக்களுடன் முதல்வர்" திட்டம், வரும் 2024 ஜூலை திங்கள் முதல் ஊரகப்பகுதிகளில் நடைமுறைப்படுத்தபட உள்ளது.

### 6.2. "நீங்கள் நலமா" திட்டம்

பொது மக்களின் கோரிக்கைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசின் திட்டங்கள் மற்றும் சேவைகள் உரிய காலத்தில் பொது மக்களுக்கு சென்று சேர்வதை உறுதி செய்ய வேண்டியது ஒவ்வொரு துறையின் பொறுப்பாகும் என்பதை எப்போதும் வலியுறுத்தி வருகிறார்கள்.

அவ்வகையில் மக்கள் நலத்திட்டங்கள் அனைத்தும் உரியவர்களுக்கு சென்று சேர்வதை உறுதி செய்யும் நோக்குடன், மக்கள் மற்றும் அரசிற்கிடையேயான இடைவெளியை குறைத்திடும் வகையில் மக்களின் கருத்துக்கள் மற்றும் பின்னூட்டத்தை பெற "நீங்கள் நலமா" என்ற புதியதொரு திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் நலத்திட்டங்களின் பயன்கள் மக்களுக்குச் சென்று சேர்வதை உறுதி செய்வது

மட்டுமல்லாமல் சேவைகளின் தரத்தினை மேம்படுத்த வழிவகைகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வலைதளம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அரசு தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அனைத்து அரசு துறை செயலாளர்கள், காவல்துறைத் தலைமை இயக்குநர், துறைத் தலைவர்கள் மற்றும் கூடுதல் காவல்துறை இயக்குநர்கள், மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள், மாநகர காவல் ஆணையர்களால் பயன்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வலைதளத்தில் பொது மக்கள் பயன்பெறும் வகையில் அனைத்து அரசு திட்டங்கள் குறித்த கையேடு தொகுப்பு பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

அரசின் நலத்திட்டங்கள் குறித்த கருத்துக்களைக் கேட்டறியும் புதுமை திட்டமான "நீங்கள் நலமா" திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 06.03.2024 அன்று

தொடங்கி வைத்து பயனாளிகளிடம் நேரடியாக தொலைபேசியில் தொடர்பு கொண்டு மக்கள் நலத்திட்டங்கள் குறித்து அவர்களின் கருத்துக்களை கேட்டறிந்தார்கள். மேலும் அதன் தொடர்ச்சியாக கடந்த 16.03.2024 அன்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு பயனாளிகளை தொடர்பு கொண்டு அவர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்தார்கள்.

இத்துறை, பொதுமக்களிடமிருந்து பெறப்படுகின்ற அனைத்து மனுக்களையும் அக்கறையோடு பரிசீலித்து அவர்களுக்கு சட்டபூர்வமாக சேரவேண்டியதை சேர்த்தும், நிராகரிக்கப்படின், உரிய காரணங்களை கூறியும் விரைவாகவும், தரமாகவும் உரியமுறையில் தீர்வு செய்ய தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

# 7. முன்னாள் படைவீரர் நலத்துறை

நம் தேசத்தின் பாதுகாப்பினை உறுதிசெய்திடும் பணியில் அயராது பணியாற்றிய முப்படைவீரர்கள், பணி ஓய்வுபெற்ற பின்பும் நலமுடன் வாழவேண்டும் என்ற நோக்குடன், அவர்களின் நலனை பாதுகாக்கும் நோக்குடன், தமிழக அரசு முன்னாள் படைவீரர்களுக்கும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும் உதவும் பொருட்டு பல்வேறு நலத்திட்டங்களின் மூலமாக மானியம் மற்றும் நிதி உதவிகளை வழங்கிவருகிறது.

## 7.1. முப்படை வீரர்கள் வாரியம்

முப்படையில் பணிபுரியும் வீரர்களின் பணியினைப் போற்றவும், ஓய்வுபெற்ற வீரர்களின் நலன்களைக் காக்கவும், முதன்முதலில் 1919–ஆம் ஆண்டில் மெட்ராஸ் தரைப்படைவீரர் வாரியம் அமைக்கப்பட்டு, அதற்கான தேவைகள் முடிக்கப்பட்ட நிலையில் 1930–ஆம் ஆண்டில் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. பின்னர், 1943–ஆம்

ஆண்டில், மெட்ராஸ் மாகாண தரைப்படை, கப்பற்படை மற்றும் விமானப்படை வீரர்கள் வாரியம் உருவாக்கப்பட்டபோது பழைய மெட்ராஸ் தரைப்படை வாரியம் இணைத்துகொள்ளப்பட்டது. 1956–ஆம் ஆண்டில் மெட்ராஸ் மாநில தரைப்படை, கப்பற்படை, விமானப்படை வீரர்கள் வாரியம் எனவும், பின்னர் 1969–ஆம் ஆண்டில் "தமிழ்நாடு மாநில முப்படை வீரர்கள் வாரியம்" எனவும் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இவ்வாரியம், மாண்புமிகு ஆளுநர் அவர்களைப் புரவலராகவும், மாண்புமிகு அமைச்சர் முன்னாள் படைவீரர் நலன் அவர்களைத் தலைவராகவும் கொண்டு செயல்பட்டு வருகிறது.

### 7.2. முன்னாள் படைவீரர் நல இயக்குநரகம்

முன்னாள் படைவீரர்கள், படைப்பணி புரிவோர் மற்றும் படைப்பணியில் இறந்தோர் ஆகியோரின் குடும்பத்தினருக்கு உதவிடும் வகையில், அரசு வகுக்கும் பல்வேறு கொள்கைகளையும், நல திட்டங்களையும் முன்னாள் படைவீரர் நல இயக்ககம் செயல்படுத்தி வருகிறது. 1974–ஆம் ஆண்டில் தமிழ்நாடு முப்படை வீரர்கள் வாரியம் மற்றும்

மெட்ராஸ் தொகுப்பு நிதி அலுவலகம் ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்டு முன்னாள் படைவீரர் நல இயக்குநரகம் உருவாக்கப்பட்டு சமூக நலத்துறையின் நிர்வாகக்கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது. பிறகு, 1976–ஆம் ஆண்டு முதல் இம்முன்னாள் படைவீரர் நல இயக்குநரகம் பொதுத் துறையின் நிர்வாகக் கட்டுபாட்டின் கீழ் இயங்கிவருகிறது. இத்துறையின் நிர்வாகச் செலவுகள் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற பங்கீட்டு விகிதத்தில் மேற்கொள்ளப்படுகிறது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த சுமார் 2500 படைவீரர்கள் ஒவ்வொரு ஆண்டும் படைப்பணியிலிருந்து ஓய்வு பெறுகின்றனர். இந்த ஆண்டு வரை முன்னாள் படைவீரர் நல இயக்ககத்தில் 1,25,550 முன்னாள் படைவீரர்கள் மற்றும் 58,052 கைம்பெண்கள் என மொத்தம் 1,83,602 நபர்கள் பதிவு செய்துள்ளனர்.

முன்னாள் படைவீரர்கள், மற்றும் அவர்களை சார்ந்தோர்களின் தேவைகளையும், கோரிக்கைகளையும் நிறைவேற்ற 30 முன்னாள் படைவீரர் நல மாவட்ட அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

## 7.3. முன்னாள் படைவீரர் நலத் துறையின் முக்கியத் திட்டங்கள் / நிதியுதவிகள் :

### 7.3.1. வீரதீரச் செயல்களுக்கான விருது, போற்றத்தக்க பணிக்கான பதக்கம் பெற்றவர்களுக்கு பண முடிப்பு வழங்குதல்:

வீரதீரச் செயல்களுக்கான விருது மற்றும் போற்றத்தக்க பணிபுரிந்தமைக்கான பதக்கங்களைப் பெற்றவர்களுக்கு அரசால் பணமுடிப்பு வழங்கப்படுகிறது. ஏப்ரல் 2023 முதல் மார்ச் 2024 வரையிலான காலத்தில், வீரதீரச் செயல்களுக்கான விருது மற்றும் போற்றத்தக்க பணிபுரிந்தமைக்கான பதக்கம் பெற்ற தமிழ்நாட்டை சேர்ந்த 14 படைவீரர்களுக்கு ரூ.5.80 இலட்சம் பணமுடிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும், பிராந்திய இராணுவத்தில் பதக்கம் பெற்ற தமிழ்நாட்டை சேர்ந்த 38 வீரர்களுக்கு தலா ரூ.4,000/- வீதம் மொத்தம் ரூ.1,52,000/- பணமுடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

வீரதீரச் செயல்களுக்கான உயர் விருதுகள் மற்றும் போற்றத்தக்க பணிபுரிந்தமைக்கு பதக்கம் பெறும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பாதுகாப்புப் படையினருக்கு வழங்கப்படும் பணமுடிப்பு 19.04.2023 முதல் நான்கு மடங்காக உயர்த்தி வழங்கப்படுகிறது.

### 7.3.2. போரில் உயிர்நீத்தோருக்கான கருணைத் தொகை

போர் அல்லது குடிமையியல் நிருவாகத்திற்கு உதவிடும் நடவடிக்கையின் போது உயிரிழந்த/ ஊனமுற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த படைவீரர்களின் தியாகத்தைப் போற்றும் வகையிலும், அவர்தம் குடும்பத்தினரின் துயர் நீக்கிடும் வகையிலும் ரூ.40 இலட்சம் வரை கருணைத் தொகை தமிழ்நாடு அரசால் வழங்கப்படுகிறது. மேலும், இக்கருணைத் தொகை தமிழ்நாட்டைச் சேர்ந்த துணை இராணுவப் படையினருக்கும் வழங்கப்பட்டு வருகிறது. ஏப்ரல் 2023 முதல் மார்ச் 2024 வரையிலான காலத்தில்,

உயிரிழந்த இரண்டு படைவீரர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணைத் தொகையாக ரூ.40 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### 7.3.3. போர்ப் பணி ஊக்க மானியம்

தமது ஒரே மகன்/மகளைப் படைப்பணிக்கு அனுப்பிய பெற்றோரைக் கௌரவிக்கும் வகையில் ரூ.20,000/- ரொக்கம் மற்றும் வெள்ளிப் பதக்கமும், ஒன்றுக்கு மேற்பட்ட மகன்/மகளைப் படைப்பணிக்கு அனுப்பிய பெற்றோருக்கு ரூ.25,000/- ரொக்கம் மற்றும் வெள்ளிப் பதக்கமும் வழங்கப்படுகிறது. ஏப்ரல் 2023 முதல் மார்ச் 2024 வரையிலான காலத்தில் 59 பெற்றோர்களுக்கு ரூ.14.19 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### 7.3.4. இராணுவப் பணியில் சேரும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் தொகுப்பு மானியம்

தமிழ்நாட்டிலிருந்து இராணுவப் பணியில் சேரும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளை

ஊக்குவிக்கவும், இராணுவப் பணிப் பயிற்சியின் போது ஏற்படும் செலவினங்களை எதிர்கொள்ளவும் பின்வருமாறு தொகுப்பு மானியம் (Lumpsum Grant) வழங்கப்படுகிறது :–

1. முப்படையில் நிரந்தர படைத்துறை அலுவலர் (Permanent Commissioned Officers) பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் (NDA / IMA / Naval / Air Force Academy) முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு ரூ.1,00,000/– வழங்கப்படுகிறது.

2. முப்படையில் குறுகியகால படைத்துறை அலுவலர் (Short Service Commissioned Officers) பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு ரூ. 50,000/– வழங்கப்படுகிறது.

3. இராணுவத்தில் இளநிலை படை அலுவலர்கள், இதர பதவிகளின் (Junior Commissioned Officer and Other Ranks) பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும்

முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு ரூ.25,000/– வழங்கப்படுகிறது.

ஏப்ரல் 2023 முதல் மார்ச் 2024 வரையிலான காலத்தில், 16 முன்னாள் படைவீரர்களுக்கு தங்களது சிறார்களை பாதுகாப்பு பணிக்கு அனுப்பியமைக்கு ரூ.8.75 இலட்சம் தொகுப்பு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**7.3.5. கருணை அடிப்படையில் பணி நியமனம்**

படைப்பணியில் உயிர்நீத்தோர், போர் மற்றும் போரையொத்த நடவடிக்கைகளில் உயிரிழந்தவர்களின் வாரிசுதாரர் ஒருவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்படுகிறது. ஏப்ரல் 2023 முதல் மார்ச் 2024 வரையிலான காலத்தில் ஒன்பது நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

### 7.3.6. மறு வேலை வாய்ப்பு அளித்தல்

முன்னாள் படைவீரர்கள் பெரும்பாலும் அவர்தம் இளம் வயதில் பல ஆண்டுகள் திறமையான பணிக்காலத்தினை மீதமாகக் கொண்டு படைப்பணியிலிருந்து விலகுவதால், அவர்களுக்கு மறு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில், தமிழ்நாடு அரசுத் துறை மற்றும் அரசு சார்ந்த துறைகளிலும் பணி நியமனங்களில் இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது. அதன் விவரம் பின்வருமாறு:–

| வ. | வகைகள் | இட ஒதுக்கீடு |
|---|---|---|
| 1. | பிரிவு "சி" பணியிடங்கள் | 5 % |
| 2. | அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் அடிப்படைப் பணியாளர்கள் பணியிடங்கள் | 10 % |
| 3. | வனக்காவலர் பணியிடங்கள் | 10% |
| 4. | வனப்பாதுகாவலர் பணியிடங்கள் | 5% |
| 5. | தேசிய மாணவர் படை அலுவலகங்களில் இலஸ்கர், ஓட்டுநர், இரவுக் காவலர்கள் பணியிடங்கள் | 25% |
| 6. | சீருடைப் பணிப் பிரிவில் பிரிவு "சி" பணியிடங்கள் | 5% |
| 7. | கால்நடை ஆய்வாளர் | 5% |

இவ்விட ஒதுக்கீட்டின் கீழ் ஏப்ரல் 2023 முதல் மார்ச் 2024 வரையிலான காலத்தில், அரசு / அரசு சார்ந்த நிறுவனங்களில் "சி" பிரிவில் 150 நபர்களும், "டி" பிரிவில் 25 நபர்களும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

### 7.3.7. கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடு

முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு பல்வேறு கல்வி நிலையங்களில் உயர் கல்விக்கு (மருத்துவம் / பொறியியல் உட்பட) கீழ்கண்டவாறு இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது:-

| வரிசை எண் | கல்வியின் பெயர் | இட ஒதுக்கீடு எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பி.இ (பொது)<br>(அண்ணா பல்கலைக்கழகம்) | 150 |
| 2. | பி.இ. (லேட்டரல் என்ட்ரி)<br>(அண்ணா பல்கலைக்கழகம்) | 15 |
| 3. | எம்.பி.பி.எஸ். | 10 |
| 4. | பி.டி.எஸ். | 01 |
| 5. | பி. பார்மஸி | 01 |
| 6. | <u>டி. பார்மஸி</u> | |
| | 1. மதுரை | 04 |
| | 2. கோயம்புத்தூர் | 02 |
| | 3. தஞ்சாவூர் | 02 |
| 7. | பி.எஸ்சி நர்சிங் | 04 |
| 8. | டிப்ளமா நர்சிங் | 57 |
| 9. | பி.பி.டி | 01 |
| 10. | <u>இந்திய மருத்துவம்</u><br>பி.எஸ்.எம்.எஸ் (B.S.M.S.) | 01 |

| வரிசை எண் | கல்வியின் பெயர் | இட ஒதுக்கீடு எண்ணிக்கை |
|---|---|---|
| | பி.ஏ.எம்.எஸ் (B.A.M.S.) | 01 |
| | பி.யு.எம்.எஸ் (B.U.M.S.) | 01 |
| | பி.எச்.எம்.எஸ் (B.H.M.S.) | 01 |
| | பி.ஒய்.என்.எஸ் (B.Y.N.S.) | 02 |
| 11. | **பி.எட்., (இளநிலை கல்வியியல்)** | |
| | ஒவ்வொரு அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் | 01 |
| | அண்ணாமலை பல்கலைக் கழகம் | 02 |
| | அழகப்பா பல்கலைக் கழகம் | 01 |
| | அவினாசிலிங்கம் பல்கலைக் கழகம் | 01 |
| 12. | டி.டி.எட் (ஆசிரியர் பட்டயப் பயிற்சி) | ஒவ்வொரு கல்வி நிறுவனங்களில் தலா மூன்று இடங்கள் |
| 13. | பி.எஸ்சி (வேளாண்மை) | 06 |
| 14. | பி.எஸ்சி (தோட்டக்கலை) | 01 |
| 15. | பி.இ.(வேளாண்மை) | 01 |
| 16. | ஐ.டி.ஐ. (தொழிற்பயிற்சி பயிலகம்) | ஒவ்வொரு பயிற்சி நிறுவனத்திலும் தலா ஐந்து இடங்கள் |
| 17. | பாலிடெக்னிக் (தொழில்நுட்ப பட்டயப்படிப்பு) | 80 |
| 18. | இளங்கலை (ம) கிராப்ட்ஸ் | 04 |
| 19. | பி.வி.எஸ்சி | 02 |
| 20. | பி.எப்.எஸ்சி | 01 |
| 21. | பி.டெக் (உணவு பதப்படுத்தும் தொழில்நுட்பம்) | 01 |
| 22. | **இளங்கலை பட்டப்படிப்பு** | ஒவ்வொரு கல்லூரியிலும் தலா ஆறு இடங்கள் |
| | | இரண்டு கிளைகள் கொண்ட கல்லூரிகளில் தலா இரண்டு இடங்கள் |
| 23. | பாலிடெக்னிக் (பகுதி நேரம்) | 01 |
| 24. | பி.எல். 3 / 5 ஆண்டுகள் | 1 சதவீதம் |
| 25. | பி.ஏ.பி.எல் (ஆனர்ஸ்) | சதவீதம் |

### 7.3.8. இரு குடும்ப ஓய்வூதியம் (Dual Family Pension)

இராணுவத்தில் பணியாற்றி ஓய்வுபெற்று மறு வேலைவாய்ப்பின் மூலம் தமிழ்நாடு அரசில் பணியாற்றிய முன்னாள் படைவீரர்களின் வாரிசுதாரர்களுக்கு இராணுவக் குடும்ப ஓய்வூதியத்துடன் சிவில் பணிக்கான குடும்ப ஓய்வூதியமும் சேர்த்து இரு குடும்ப ஓய்வூதியங்கள் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது வரை 129 குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு, இராணுவப்பணி மற்றும் குடிமுறை பணிக்கான ஓய்வூதியமும் சேர்த்து இரு குடும்ப ஓய்வூதியங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

### 7.3.9. பதினைந்து ஆண்டு கால இராணுவப் பணியினை பட்டதாரி கல்விக்கு இணையாகக் கருதுதல்

பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று (இந்திய இராணுவத்தின் சிறப்பு சான்றிதழ் அல்லது கப்பல் படை / விமானப் படை ஆகியவற்றில் அதற்கு இணையான தகுதி) இராணுவத்தில் பதினைந்து

ஆண்டு காலம் பணியாற்றிய முன்னாள் படைவீரர்கள் பட்டப்படிப்பு தகுதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ள குரூப் 'சி' பணியிடங்களில் நியமனம் செய்ய தகுதியுடையவராகிறார்கள்.

**7.3.10. கோயில் பாதுகாப்புப் படை**

தமிழக கோயில்களிலுள்ள சிலைகள், நகைகள், உண்டியல் சேகரிப்புகள் மற்றும் விலையுயர்ந்த பொருட்களைப் பாதுகாக்கும் பொருட்டு கோயில் பாதுகாப்புப் படை உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பாதுகாப்புப் பணியில் ஈடுபடும் முன்னாள் படைவீரர்களுக்கு மாதம் ரூ.7,300/– தொகுப்பூதியம் வழங்கப்படுகிறது. தற்போது, 1060 முன்னாள் படைவீரர்கள் கோயில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

**7.3.11. தேர்தல் பாதுகாப்புப் பணி**

நாடாளுமன்றம் / சட்டமன்றம் / உள்ளாட்சி மன்றத் தேர்தல்களின் போது பாதுகாப்புப் பணியில்

இருக்கும் காவல்துறையினருக்கு உதவிடும் வகையில் முன்னாள் படைவீரர்கள் தேர்தல் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர். அந்த வகையில், இந்த ஆண்டு தேர்தல் பணியில் 10,000 முன்னாள் படைவீரர்கள் மதிப்பூதியம் அடிப்படையில் பாதுகாப்புப் பணியில் விருப்பத்தின்பேரில் பங்கேற்றனர்.

7.3.12. **கொடிநாள் நிதி**

கொடிநாள் நிதி மாண்புமிகு ஆளுநர் அவர்களைத் தலைவராகக் கொண்ட தமிழ்நாடு கொடிநாள் நிலைக்குழுவினால் நிருவகிக்கப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் முன்னாள் படைவீரர் நலன் அவர்கள் இக்குழுவின் துணைத் தலைவர் ஆவார். முன்னாள் படைவீரர்களுக்கு திருமணம், தொழில், குடியிருப்பு, மருத்துவம் தொடர்பான மானியங்கள், சிறார்களுக்கான கல்வி மேம்பாட்டு நிதியுதவி, பயிற்சித் திட்டங்களுக்கு நிதி வழங்குதல் ஆகியவை

கொடிநாள் நிதி மூலம் செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதம் 7–ஆம் நாள் தொடங்கி அடுத்த ஆண்டு டிசம்பர் மாதம் 6–ஆம் நாள்வரை கொடிநாள் நிதி திரட்டப்படுகிறது. இவ்வாறு வசூலிக்கப்படும் கொடிநாள் நிதியானது, தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி, தொகுப்பு நிதி ஆகிய இருநல நிதிகள் மூலம் முன்னாள் படைவீரர்களுக்கும், அவர்களைச் சார்ந்தோருக்குமான நலத் திட்ட உதவிகளைச் செயல்படுத்தப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த வருடம் முதல் கொடிநாள் நிதி இணையவழி (https://flagday.tn.gov.in) மூலமாக மட்டுமே வசூலிக்கப்பட்டு வருகிறது.

கொடிநாள் வசூல் இலக்கில் 5 சதவீதம் தொகுப்பு நிதிக்கும், எஞ்சிய தொகை தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதிக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது. 2022 ஆம் ஆண்டு (07.12.2022 முதல் 06.12.2023 வரை) கொடிநாள்

நிதியாக ரூ.59.61 கோடி வசூல்செய்யப்பட்டது. அதேபோல், 2023–ஆம் ஆண்டில் [(07.12.2023 முதல் 14.06.2024 வரையிலான காலத்தில்) (ரூ.13.30 கோடி (20.69%)] கொடிநாள் நிதி வசூல் செய்யப்பட்டுள்ளது. கொடிநாள் நிதிக்கு வழங்கப்படும் நன்கொடைகளுக்கு, வருமான வரிச் சட்டம், 1961, பிரிவு. 80G (5) (vi)–இன் கீழ் வருமான வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் படைவீரர்களுக்கான நலத்திட்டங்கள், சலுகைகள் பற்றிய விரிவான விவரங்களை உள்ளடக்கிய கொடிநாள் மலர் ஆண்டுதோறும் வெளியிடப்பட்டு வருகிறது.

### 7.3.13. தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி

மாண்புமிகு அமைச்சர் முன்னாள் படைவீரர் நலன் அவர்களின் தலைமையில் தமிழ்நாடு முப்படைவீரர் வாரியம் செயல்படுகிறது. மாண்புமிகு ஆளுநர் அவர்கள் இவ்வாரியத்தின் புரவலர் ஆவார். மேலும் அரசு தலைமைச் செயலாளர் அவர்கள்

துணைத் தலைவராகவும், ஒன்றிய / மாநில அரசு துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் உறுப்பினர்களாகவும் உள்ளனர்.

கூடுதல் செயலாளர், பொதுத் துறை / அலுவல் வழி இயக்குநர், முன்னாள் படைவீரர் நலத்துறை அவர்களைத் தலைவராகக் கொண்டு தமிழ்நாடு முப்படைவீரர் வாரியத்தின் உட்குழுவான தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதிக் குழு செயல்படுகிறது.

கொடிநாள் நிதி வசூல், வைப்பு நிதியின் வட்டி, சொத்துகளிலிருந்து பெறப்படும் உரிமக் கட்டணம் ஆகியவை இந்நிதிக்கு நிதி ஆதாரமாக உள்ளது.

முன்னாள் படைவீரர்களுக்கும் அவர்களைச் சார்ந்தோருக்கும் இரண்டாம் உலகப்போர் நிதியுதவி, ஆயுட்கால மாதாந்திர நிதியுதவி, பல்வேறு வகையிலான மருத்துவ நிதியுதவிகள், திருமண நிதியுதவி, செயற்கை உபகரணங்களுக்கான நிதியுதவி, ஈமச்சடங்கு நிதியுதவிகள் போன்ற உதவிகள் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகின்றன.

## தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து வழங்கப்படும் நிதியுதவிகள் (01.04.2023 முதல் 31.03.2024)

### (அ) மாதாந்திர நிதியுதவி

| வ. எண். | நிதியுதவியின் பெயர் | மாதாந்திர நிதியுதவி (ரூ.) | பயனாளிகளின் எண்ணிக்கை | தொகை (நிலுவைத் தொகை உட்பட) ரூ. |
|---|---|---|---|---|
| 1. | இரண்டாம் உலகப்போர் (முன்னாள் படைவீரர்) நிதியுதவி | 10,000/- | 33 | 35,00,000 |
| 2. | உலகப்போர் (கைம்பெண்கள்) நிதியுதவி | 4,000/- | 1816 | 8,70,48,000 |
| 3. | முதியோர் நிதியுதவி | 4,000/- | 986 | 5,07,91,000 |
| 4. | தொழுநோய் / காசநோயாளிகளுக்கான நிவாரணம் / மாற்றுத் திறனாளி/குள்ளமானவர்களுக்கான நிவாரணம் | 5,000/- | 230 | 1,41,03,500 |
| 5. | பக்கவாத நிவாரணம் / பார்வையற்றோருக்கான நிவாரணம் / புற்றுநோய் நிவாரணம் / மனவளர்ச்சிக் குன்றிய சிறார்களுக்கான நிவாரணம், மனநோய் கொண்ட முன்னாள் படைவீரரின் மனைவி, கைம்பெண்களுக்கான நிவாரணம் | 7,000/- | 1057 | 9,26,29,000 |
| | | **மொத்தம்** | 4122 | 24,80,71,500 |

## (ஆ) இதர நிதி உதவிகள்

| வ. எண். | நிதியுதவியின் பெயர் | ஒருமுறை வழங்கப்படும் தொகை ரூ. | பயனாளிகளின் எண்ணிக்கை | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | திருமண மானியம் (இரண்டு மகள்கள்) | 25,000/- | 344 | 86,08,000 |
| 2. | ஈமச்சடங்கு மானியம் (முன்னாள் படைவீரர்களுக்கு) | 10,000/- | 2008 | 2,00,80,000 |
| 3 | ஈமச்சடங்கு மானியம் (கைம்பெண்கள்) | 7,000/- | 719 | 50,33,000 |
| 4. | மொத்த மானியம் – செயற்கை உபகரணங்கள் மற்றும் கண் கண்ணாடி மானியங்கள் | – | 2753 | 98,55,116 |
| 5. | வீட்டு கடன் மானியம், வீட்டு வரி மீளப் பெறுதல் மற்றும் வேலைவாய்ப்பு முன் பயிற்சி | – | 18 | 18,00,000 |
| 6. | நிம்மதி இல்லம் மற்றும் புனே பக்கவாத மறுவாழ்வு மைய உள்நோயாளி செலவினம் ஆகியவை | – | 7 | 5,08,000 |
| | | **மொத்தம்** | 5849 | 4,58,84,116 |
| | | **ஆக மொத்தம் (அ + ஆ)** | 9971 | 29,39,55,616 |

ஏப்ரல் 2023 முதல் மார்ச் 2024 வரையிலான காலத்தில், 9,971 முன்னாள் படைவீரர்களுக்கும், அவர்களைச் சார்ந்தோருக்கும் மேற்கண்ட நிதியிலிருந்து பல்வேறு நிதியுதவிகளும், மானியங்களும் ரூ.29.39 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளது.

### 7.4. இராணுவ ஆட்சேர்ப்பு முகாம்

இராணுவ ஆட்சேர்ப்பு முகாம்களுக்கு மாவட்ட நிருவாகம் மூலம் மேற்கொள்ளப்படும் செலவினத்திற்காக முகாம் ஒன்றுக்கு ரூபாய் ஆறு இலட்சம் வீதம் ஐந்து முகாம்களுக்கு ஆண்டிற்கு ரூ.30 இலட்சம் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டு நடைபெற்ற மூன்று அக்னிபத் (கிருஷ்ணகிரி, கடலூர் மற்றும் பெரம்பலூர்) இராணுவ ஆட்சேர்ப்பு முகாம்களுக்காக ரூ.18 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**7.5. முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோரின் திறன் மேம்பாட்டுப் பயிற்சி.**

படைவீரர் / முன்னாள் படைவீரர்களை சார்ந்த மகளிருக்கு கிருஷ்ணகிரி மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தில் 03.07.2023 முதல் 15.11.2023 வரையிலான காலத்தில் 26 பயனாளிகளுக்கு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மூலம் தையற்பயிற்சி மற்றும் எம்பிராய்டரி பயிற்சி வழங்கப்பட்டது.

இப்பயிற்சிக்காக செலவினத் தொகையாக ரூ.2,97,540/- (ரூபாய் இரண்டு இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து ஐநூற்று நாற்பது மட்டும்) விடுவிக்கப்பட்டுள்ளது.

**7.6. தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பயிற்சியில் தேர்ச்சிபெறுபவர்களுக்கான உதவித்தொகை**

முன்னாள் படைவீரர்களுக்கும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கும் தட்டச்சு, சுருக்கெழுத்து போன்ற

தொழில்நுட்பப் பயிற்சியில் தேர்ச்சி பெறுபவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் உதவித் தொகை;

| வ. எண். | விவரம் | தொகை |
|---|---|---|
| 1. | தமிழ், ஆங்கிலம் தட்டச்சு (கீழ்நிலை) | ரூ. 3,000/– |
| 2. | தமிழ், ஆங்கிலம் தட்டச்சு (மேல்நிலை) | ரூ. 5,000/– |
| 3. | தமிழ், ஆங்கிலம் சுருக்கெழுத்து தட்டச்சு (கீழ்நிலை) | ரூ. 7,000/– |
| 4. | தமிழ், ஆங்கிலம் சுருக்கெழுத்து தட்டச்சு (மேல்நிலை) | ரூ. 10,000/– |

ஏப்ரல் 2023 முதல் மார்ச் 2024 வரையிலான காலத்தில் இத்திட்டத்தின் கீழ் 14 பயனாளிகளுக்கு ரூ.78 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

## 7.7. வீட்டு கடன் மானியம்

முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களின் கைம்பெண்கள் (அவில்தார் படைத்தரம் வரையில்) வீடு கட்ட / வீடு வாங்க பெறப்படும் கடன் தொகைக்கு ரூபாய் ஒரு லட்சம் மானியமாக வழங்கப்படுகிறது. ஏப்ரல் 2023 முதல் மார்ச் 2024

வரையிலான காலத்தில், 18 நபர்களுக்கு ரூ.18 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது

## 7.8. படைவீரர் மாளிகை / முன்னாள் படைவீரர் மையம் / முன்னாள் படைவீரர் நல இயக்கக வளாகம்

நலத் திட்டங்களுக்காக நிதி திரட்டும் வகையில், 11–படைவீரர் மாளிகை, 17– முன்னாள் படைவீரர் மையம் மற்றும் ஒரு முன்னாள் படைவீரர் நல இயக்கக வளாகம் ஆகிய கட்டடங்கள் முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து கட்டப்பட்டுள்ளன. இதன் மூலம் கிடைக்கும் வருவாய், முன்னாள் படைவீரர் நல நிதியுடன் சேர்க்கப்படுகிறது.

ஏப்ரல் 2023 முதல் மார்ச் 2024 வரையிலான காலத்தில், இச்சொத்துகள் மூலம் ரூ.3.10 கோடி வருவாய் பெறப்பட்டுள்ளது.

## 7.9.மின் ஆளுமைத் திட்டம்

முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் குடும்பங்களை சார்ந்த கைம்பெண்களின் அனைத்து ஆவணங்களும் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாடு மின்னணுவியல் கழகம் மூலமாக ஒப்பந்த அடிப்படையில் ஒரு பணியாளர் நியமனம் செய்யப்பட்டு மின் ஆளுமையில் மாவட்ட அலுவலகங்களிலிருந்து பெறப்படும் குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கணினியில் நேரடியாகப் பதிவு செய்தல், அடையாள அட்டை வழங்குதல், முன்னாள் படைவீரர்களின் சிறார்கள் கல்லூரியில் சேர்வதற்கான சார்ந்தோர் சான்று வழங்குதல், முன்னாள் படைவீரர்களின் வேலைவாய்ப்பிற்கான பதிவுகள் ஆகியவை மின் ஆளுமை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொகுப்பு நிதியிலிருந்து கல்வி உதவித் தொகை பெறுவதற்கு முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களை சார்ந்தோர்கள்

இணைய வழி மூலம் விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. (**https://www.exwel.tn.gov.in**)

7.10. **தொகுப்பு நிதி**

மாண்புமிகு ஆளுநர் அவர்களைத் தலைவராகக் கொண்ட மாநில மேலாண்மைக் குழுவால் தொகுப்பு நிதி நிர்வகிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு அமைச்சர் முன்னாள் படைவீரர் நலன், அரசு தலைமைச் செயலாளர், தென்மண்டல இராணுவத் தளபதி ஆகியோர் இக்குழுவின் துணைத் தலைவர்கள் ஆவர். இந்நிதியின் நிலையான உட்குழு அரசு தலைமைச் செயலாளர் அவர்களைத் தலைவராகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

இந்நிதியிலிருந்து போரில் உயிர் நீத்தோர் குடும்பத்தினர் மற்றும் போரில் ஊனமுற்ற முன்னாள் படைவீரர்களுக்குப் பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்குவதுடன் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் பெறும் வங்கி கடன்களுக்கு வட்டி மானியமும்

வழங்கப்பட்டு வருகிறது. மேலும், முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கான கல்வி உதவித்தொகை ரூ. 2,000/-முதல் ரூ.25,000/- வரை பள்ளிக் கல்வியிலிருந்து முதுகலைக் கல்வி, தொழில் நுட்பக்கல்வி மற்றும் பட்டமேல்படிப்பு வரை வழங்கப்படுகிறது.

2022-23 முதல் IITs, IIMs & தேசிய சட்ட பள்ளியில் பயிலும் முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு ஊக்கத்தொகையாக ரூ.50 ஆயிரமும், சைனிக் பள்ளியில் சேரும் முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் கைம்பெண்களுக்கு ஊக்கத்தொகையாக ரூ.25 ஆயிரமும் ஆண்டொன்றிற்கு வழங்கப்படுகிறது.

## 7.11. தொகுப்பு நிதியிலிருந்து வழங்கப்படும் நிதியுதவிகள்

| வ. எண். | நிதியுதவியின் பெயர் | ஒருமுறை வழங்கப்படும் தொகை ரூ. | பயனாளிகளின் எண்ணிக்கை | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | போரில் வீர மரணம் அடைந்தோரின் வாரிசுதாரர்களுக்குக் கருணைத் தொகை | 1,00,000/-(ம) 50,000/- | 4 | 3,50,000/- |
| 2. | போரில் ஊனமுற்றோருக்குக் கருணைத் தொகை | 30,000/- (ம) 50,000/- | 11 | 3,90,000/- |
| 3. | போரில் வீர மரணம் அடைந்தோர், 50%-க்கு மேல் ஊனமுற்றோரின் மகள்களுக்குத் திருமண நிதியுதவி | 1,00,000/- மற்றும் 8 கிராம் தங்கம் | 3 | 3,00,000/- |
| 4. | போரில் 50%-க்கு கீழ் ஊனமுற்றோரின் மகள்களுக்குத் திருமண நிதியுதவி | 50,000/- மற்றும் 8 கிராம் தங்கம் | 1 | 50,000/- |
| 5. | கல்வி உதவித் தொகை (பள்ளி கல்வி முதல் தொழிற் கல்வி வரையில்) | 2,000/- முதல் 25,000/- வரை | 7434 | 15,35,58,086/- |
| 6. | போரில் வீர மரணம் அடைந்தோர் / ஊனமுற்றோருக்கு வீடு பராமரிப்பு மானியம் | 50,000/- | 1 | 50,000/- |

| வ. எண். | நிதியுதவியின் பெயர் | ஒருமுறை வழங்கப்படும் தொகை ரூ. | பயனாளிகளின் எண்ணிக்கை | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 7. | வருடாந்திர பராமரிப்பு மானியம் (அரசிடமிருந்து அடுத்து வரும் நிதியாண்டில் மீளப் பெறப்படும்) | 25,000/- | 470 | 1,20,50,000/- |
| 8. | வங்கி கடன் வட்டி மானியம் (தனி நபர்) | - | 355 | 35,74,606/- |
| 9. | வங்கி கடன் வட்டி மானியம் (சுயஉதவி குழு) | - | 3 | 27,414/- |
| 10. | தொகுப்பு மானியம் | - | 16 | 8,75,000/- |
| 11. | IIT, IIMs கல்வி ஊக்கத்தொகை | - | 7 | 3,80,000/- |
| 12. | சைனிக் பள்ளியில் பயிலும் சிறார்களின் பெற்றோற்களுக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகை | - | 39 | 9,75,000/- |
| 13. | தொழிற்கூட மானியம் | - | 1 | 50,000/- |
| | | **மொத்தம்** | 8345 | 17,26,30,106/- |

ஏப்ரல் 2023 முதல் மார்ச் 2024 வரையிலான காலத்தில், 8345 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு இந்நிதியிலிருந்து ரூ.17.26 கோடி நிதியுதவிகள் / மானியங்கள் வழங்கப்பட்டுள்ளன.

### 7.12. சுய வேலை வாய்ப்புத் திட்டங்கள்

முன்னாள் படைவீரர்கள் பயனடையும் வகையில் பல்வேறு சுயவேலைவாய்ப்புகளை அதிகரித்திட அரசு முனைப்பாக உள்ளது. சுய வேலை வாய்ப்பிற்காகப் பெறப்படும் ரூ.10 இலட்சம் வரையிலான வங்கி கடன்களுக்கு 75% வட்டி மானியமும், சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் ரூ.15 இலட்சம் வரையிலான வங்கிக் கடன்களுக்கு 100% வட்டி மானியமும் தொகுப்பு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

ஏப்ரல் 2023 முதல் மார்ச் 2024 வரையிலான காலத்தில், இத்திட்டங்களின் மூலம் ரூ.36.02 இலட்சம் மானியமாக 360 முன்னாள்

படைவீரர்களுக்கும், மூன்று சுய உதவிக் குழுக்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. தொழிற்கூட மானியம், தொழில் முனையும் முன்னாள் படைவீரர்களுக்கு தொழிற்கூடத்தின் செலவினத்தில் 25% அல்லது ரூ.50,000/- இதில் எது குறைவோ அத்தொகை வழங்கப்படுகிறது.

### 7.13. முன்னாள் இராணுவத்தினருக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி:

தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் (Tamil Nadu Skill Development Corporation) வழியாக விருப்பமுள்ள முன்னாள் இராணுவத்தினருக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்குவதன் மூலம் தொழில் நிறுவனங்களில் முன்னாள் இராணுவத்தினர் வேலைவாய்ப்பு பெறும் விகிதத்தினை அதிகரிக்கும் பொருட்டு, நபர் ஒருவருக்கு ரூபாய் 7,000/- செலவில் 10,000 முன்னாள் இராணுவத்தினருக்கு மொத்தமாக ரூபாய் 7 கோடி மதிப்பீட்டில் திறன் மேம்பாட்டு பயிற்சி

வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கடந்த ஆண்டு சுதந்திர தின உரையின் போது அறிவிக்கப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது.

இதன்படி, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த 43 முன்னாள் படைவீரர்கள் "Tour Guide" திறன் பயிற்சி பெறவும், வேலூர், திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களைச் சார்ந்த 68 முன்னாள் படைவீரர்கள் CNC திறன் பயிற்சி பெற விருப்பம் தெரிவித்துள்ளனர். இப்பயிற்சியினை அந்தந்த மாவட்டங்களில் உள்ள தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் மூலம் அளித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

**7.14. வீட்டுவரி மீளப்பெறும் சலுகை:**

வீட்டுவரி மீளப்பெறும் சலுகையானது போர் கைம்பெண்கள், குடும்ப ஓய்வூதியம் பெறும் முன்னாள் படைவீரர்களின் கைம்பெண்கள், வருடாந்திர பராமரிப்பு மானியம் பெறும் போரில்

ஊனமுற்ற படைவீரர் மற்றும் வீரதீரச் செயலுக்கான வீர விருதுகள் பெற்ற முன்னாள் படைவீரர்கள் ஆகியோர்களுக்கு அவர்கள் வசிக்கும் வீட்டிற்காக செலுத்தும் வீட்டு வரியினை ஒரு வருடத்திற்கு (இரண்டு அரையாண்டு) அதிகபட்சம் ரூ.10,000/– (அல்லது) செலுத்தப்பட்ட அசல் தொகை இதில் எந்த தொகை குறைவோ அத்தொகை ஈடு செய்து வழங்கப்படுவது நடைமுறையில் இருந்து வந்தது. தற்போது இத்திட்டம் நடப்பு நிதி ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட உரையின் போது, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் வருமான வரி வரம்பிற்குள் வரும் முன்னாள் படைவீரர்களை தவிர்த்து அனைத்து முன்னாள் படைவீரர்களுக்கும் நீட்டிப்பு செய்து வழங்கப்பட்டது.

## 8. தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (டெக்ஸ்கோ)

தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் மறுவேலைவாய்ப்பு வழங்கவும், மற்றும் பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திடவும் தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (டெக்ஸ்கோ), நிறுவனங்கள் சட்டம் 1956–ன்படி 1986ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இக்கழகமானது, முன்னாள் படைவீரர் நல இயக்ககத்தில் வேலைவாய்ப்பிற்காகப் பதிவு செய்துள்ள முன்னாள் படைவீரர்களைப் பல்வேறு ஒன்றிய, மாநில அரசு துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள், ஏனைய வாரியங்களில் பாதுகாப்புப் பணியாளர்கள், ஓட்டுநர்கள், இளநிலை உதவியாளர்கள், தொலைபேசி இயக்குபவர்கள், சுற்றுலாக் காவலர்கள், செவிலிய உதவியாளர்கள், தீயணைப்பாளர்கள், துப்பாக்கி ஏந்திய பாதுகாவலர்கள்,

காப்பாளர்கள் நிலையில் பணியமர்த்தக் கோரும் பணியிடங்களில் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தி மறுவேலைவாய்ப்பு வழங்கும் "**மனித வள முகமையாக**" செயல்பட்டு வருகிறது.

டெக்ஸ்கோ, மூலமாக 31.03.2024 தேதியில், 6,979 பாதுகாவலர்கள், 1241 ஓட்டுநர்கள், 101 இளநிலை உதவியாளர்கள், 21 தொலைபேசி இயக்குபவர்கள், 53 துப்பாக்கி ஏந்தியக் காவலர்கள், 21 அலுவலக உதவியாளர்கள் மற்றும் 3 செவிலியர் உதவியாளர்கள் உட்பட மொத்தம் 8,419 முன்னாள் படைவீரர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஒன்றிய மற்றும் மாநில அரசு நிர்வாகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் ஏனைய வாரியங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மேலும், இந்து சமய அறநிலைய துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கோயில்களில் பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி கேமராக்களை கண்காணிக்கும் பொருட்டு, 49 முன்னாள் படைவீரர்கள் உதவி பாதுகாப்பு

அலுவலர்கள் நிலையில் கண்காணிப்பாளர்களாக பணி அமர்த்தப்பட்டுள்ளனர். அதேபோன்று, தமிழ்நாட்டில் உள்ள தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் (TAMIN) கல்குவாரிகளில் கற்கள் கொண்டு செல்வதை கண்காணிக்கும் பொருட்டு 33 திட்ட அலுவலர்/உதவி பாதுகாப்பு அலுவலர்/ பாதுகாவலர்கள் நிலையிலும் மற்றும் சென்னை துறைமுகத்தில் நிர்வாக அலுவலர்களாக நான்கு முன்னாள் படைவீரர்களும் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இதில் ஒன்றியப் புனரமைப்புத் தலைவர் ஊதிய விகிதத்தில், 2153 முன்னாள் படைவீரர்களும், தமிழ்நாடு குறும ஊதிய விகிதத்தில், 6266 முன்னாள் படைவீரர்களும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

### 8.1. "மின் திருட்டுத்தடுக்கும் படை"

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் கோரியதன் அடிப்படையில், மின் திருட்டை தடுக்கும் பொருட்டு, தனித்திறன் கொண்ட முன்னாள்

அவில்தார்கள் மற்றும் முன்னாள் இளநிலை படை அலுவலர்கள் நிலையில் 215 முன்னாள் படைவீரர்களைக் கொண்டு "**மின் திருட்டுத்தடுக்கும் படை**" அமைக்கப்பட்டுள்ளது.

**8.2. "சுற்றுலா பாதுகாப்புப் படை"**

தமிழ்நாடு சுற்றுலாத் துறை கோரியதற்கிணங்க, அவில்தார்கள் மற்றும் இளநிலை படை அலுவலர்கள் நிலையில், 31 முன்னாள் படைவீரர்களைக் கொண்டு "சுற்றுலா பாதுகாப்புப் படை" அமைக்கப்பட்டு, இராமேஸ்வரம், உதகமண்டலம், மாமல்லபுரம், கன்னியாகுமரி மற்றும் கொடைக்கானல் ஆகிய ஐந்து முக்கியச் சுற்றுலா தலங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**8.3. டெக்ஸ்கோவிற்கு புதிய சொந்தக் கட்டடம்**

தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்திற்கு நந்தனம் விரிவாக்கத்தில் ரூ.19.19 கோடி மதிப்பீட்டில் 760.16 ச.மீ. பரப்பளவில் புதிய அலுவலகக் கட்டடம் கட்டப்பட்டு மாண்புமிகு

முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு 18.08.2023 முதல் புதிய கட்டடத்தில் தலைமை அலுவலகம் இயங்கிவருகிறது.

**8.4. இதர நலத்திட்டங்கள்**

முன்னாள் படைவீரர்களின் நலன் கருதி தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் கீழ்காணும் நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

**"விபத்துக் காப்பீட்டுத் திட்டம்"** – தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தில் பணியமர்த்தப்பட்ட அனைத்து பணியாளர்களுக்கும் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, இறந்தவரின் வாரிசுதாரர்களுக்கு ரூ.5.00 இலட்சம் விபத்து காப்பீடாக வழங்கப்பட்டு வருகிறது.

**"தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழக நிதித் திட்டம்"** – தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் முன்னாள் படைவீரர்கள் பணி ஓய்வு பெற்ற பின்னர்,

பணப்பலன் அடையும் வகையில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு தனியரது வங்கி கணக்கில் மாதந்தோறும் ரூ.250/- செலுத்தப்பட்டு வருகிறது.

**முன்னாள் படைவீரர் நலநிதி பங்களிப்பு –**

அரசாணை நாள்:10.04.2015-ன்படி, கடந்த மூன்று ஆண்டுகளில் ஈட்டிய சராசரி நிகர லாபத்தில் ஐந்து சதவீதம், முன்னாள் படைவீரர்களின் நலனுக்காக "தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் நலநிதி" க்கு பங்களிப்பாக வழங்கப்படுகிறது.

**ஊழியர்கள் வைப்புத் தொகையுடன் இணைக்கப்பட்ட காப்பீடு (EDLI)** – தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தில் பணிபுரியும் ஒப்பந்த பணியாளர்கள் பணியின்போது மரணமடைந்தால் அவர்களது குடும்பத்தினருக்கு ரூ.2,50,000/- முதல் ரூ.7,00,000/- தொழிலாளர் வைப்பு நிதி நிறுவனம் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

**இலவச போக்குவரத்து வசதி** – சென்னை, நந்தம்பாக்கம் மற்றும் தாம்பரத்தில் அமைந்துள்ள முன்னாள் படைவீரர்களுக்கான மருத்துவமனைகளில் இலவச மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக அருகாமையில் உள்ள மாவட்டங்களில் இருந்து வரும் முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு கிண்டி இரயில் நிலையத்திலிருந்து நந்தம்பாக்கம் வரை மற்றும் தாம்பரம் இரயில் நிலையத்திலிருந்து ECHS Poly Clinic வரை சென்று வர இலவச போக்குவரத்து வசதி அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறையில் உள்ளது.

**நம்பகத்தன்மை உத்திரவாத காப்பீடு** – பணியின்போது திருட்டால் ஏற்படும் நஷ்டத்தை ஈடுகட்டவும், முன்னாள் படைவீரர்கள் பாதிக்கப்படாமல் இருக்கவும் உத்திரவாத காப்பீட்டு திட்டம் ரூ.5.00 லட்சம் வரை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## 9.மாநில மனித உரிமைகள் ஆணையம்

"மனித குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களின் உள்ளார்ந்த கண்ணியம், சமமான மற்றும் பிரிக்க முடியாத உரிமைகளை அங்கீகரிப்பது உலகில் சுதந்திரம், நீதி மற்றும் அமைதிக்கான அடித்தளமாகும்"

– மனித உரிமைகள் பற்றிய உலகளாவிய பிரகடனம் ஐ.நா.

மனித உரிமைகள் தார்மீகக் கோட்பாடுகள் அல்லது மனித நடத்தையின் தரத்திற்கான விதிமுறைகள் மற்றும் அனைத்தும் கணிசமான சட்டத்தில் கணிசமான உரிமைகளாக தொடர்ந்து பாதுகாக்கப்படுகின்றன. இவை மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் மூலம் மனித உரிமைகளை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாக்கும் நோக்கத்துடன் மாநில அரசின் தனி நிறுவனமாக உறுதி செய்யப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன.

மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 2005ன் பிரிவு 21(2)ன் கீழ் 1997ஆம் ஆண்டு மாநில மனித உரிமை ஆணையம் உருவாக்கப்பட்டது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 7வது அட்டவணையின் மாநிலப் பட்டியல் மற்றும் ஒருங்கியல் பட்டியல் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள விஷயங்களில் மட்டுமே இந்த பல உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பு மனித உரிமை மீறல் குறித்து விசாரிக்க முடியும்.

**மாநில மனித உரிமை ஆணையத்தின் செயல்பாடுகள்:–**

- எந்தவொரு மனித உரிமை மீறல் அல்லது ஒரு பொது ஊழியர் அத்தகைய மீறலைத் தடுப்பதில் அலட்சியமாக இருந்தால், தானாக முன்வந்து அல்லது அதற்கு சமர்ப்பிக்கப்பட்ட மனு அல்லது நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் விசாரித்தல்.

- நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் சம்பந்தப்பட்ட எந்த நடவடிக்கையிலும் ஆணையம் தலையிடுதல்.
- கைதிகளின் வாழ்க்கை நிலைமைகளை ஆய்வு செய்வதற்கும், அதற்கான பரிந்துரைகளை வழங்குவதற்கும் சிறைகள் மற்றும் தடுப்புக் காவல் இடங்களுக்குச் செல்லுதல்.
- மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அரசியலமைப்பு மற்றும் பிற சட்டப் பாதுகாப்புகளை மறுஆய்வு செய்தல் மற்றும் அவற்றை திறம்பட செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பரிந்துரைத்தல்.
- மனித உரிமைகளை அனுபவிப்பதைத் தடுக்கும் பயங்கரவாதச் செயல்கள் உள்ளிட்ட காரணிகளை மதிப்பாய்வு செய்தல் மற்றும் தீர்வு நடவடிக்கைகளைப் பரிந்துரைத்தல்.

- மனித உரிமைகள் துறையில் ஆராய்ச்சியை மேற்கொள்வது மற்றும் மேம்படுத்துதல்.
- மனித உரிமைகள் பற்றிய கல்வியறிவை மக்களிடையே பரப்புதல் மற்றும் இந்த உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பாதுகாப்புகளைப் பற்றிய விழிப்புணர்வை ஊக்குவித்தல்.

**மாநில மனித உரிமை ஆணையத்தின் நிர்வாக அமைப்பு:–**

1. தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையம் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி அல்லது நீதிபதி அவர்களை மாண்புமிகு தலைவராகவும், உயர் நீதிமன்ற நீதிபதி பதவி வகிப்பவர் அல்லது ஓய்வு பெற்றவர் அல்லது மாவட்ட நீதிபதியாக ஏழு ஆண்டுகள் பணிபுரிந்தவர் ஒரு உறுப்பினராகவும், மற்றொரு உறுப்பினர் மனித உரிமைகள் பற்றி அறிந்தவர் மற்றும் உணர்ந்தவர் என மாண்புமிகு

உறுப்பினர்கள் இருவரையும் குழுவின் பரிந்துரைப்படி ஆளுநரால் நியமிக்கப்படுவர்.

அ. முதலமைச்சர் – தலைவர்

ஆ. சட்டமன்ற உறுப்பினர் சபாநாயகர்

இ. உள்துறை அமைச்சர் மற்றும்

ஈ. எதிர்க்கட்சித் தலைவர்.

2. மாவட்ட நீதிபதியாக குறைந்தபட்சம் ஏழு ஆண்டுகள் அனுபவம் உள்ள மாநிலத்தின் உயர் நீதிமன்றத்தின் அல்லது மாவட்ட நீதிபதியின் நீதிபதியாக அல்லது இருந்த ஒரு உறுப்பினர்.

3. மனித உரிமைகள் தொடர்பான விஷயங்களில் அறிவு அல்லது நடைமுறை அனுபவம் உள்ள நபர்களில் ஒரு உறுப்பினர்.

4. ஆணையத்தின் அனைத்து நிர்வாக மற்றும் நிதி அதிகாரத்தையும் செயல்படுத்தும் தலைவரின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு மாநில ஆணையத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ஒரு செயலாளரைக் கொண்டுள்ளது.

மாநில மனித உரிமை ஆணையத்திற்கு மாநில அரசாங்கத்தின் மானிய வடிவில் நிதியளிக்கப்படுகிறது. 01.01.2023 முதல் 31.12.2023 வரை, ஆணையத்தால் பெறப்பட்ட 13,394 வழக்குகளில், 11 விதிமீறல் வழக்குகளும், 12,160 விதிமீறல் அல்லாத வழக்குகளும் இதுவரை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. மேலும், 01.01.2024 முதல் 31.05.2024 வரை, 3722 வழக்குகள் ஆணையத்தால் பெறப்பட்ட நிலையில், 10 விதிமீறல் வழக்குகளும், 3017 விதிமீறல் அல்லாத வழக்குகளும் இதுவரை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. மாநில மனித உரிமைகள் ஆணையம் 2023 ஆம் ஆண்டு பின்வரும் நிகழ்ச்சிகளை பல்வேறு நாட்களில் நடத்தி அதன் மூலம் மனித உரிமைகளை பாதுகாக்க மற்றும் மேம்படுத்துவதற்கான விழிப்புணர்வை உருவாக்கி உள்ளது.

அ) உலக சமூக நீதி நாள்.

ஆ) புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு தொடர்பான ஆலோசனை கூட்டம் 21.02.2023 அன்று மாநில மனித உரிமைகள் ஆணையம் தமிழ்நாடு மற்றும் தமிழ்நாடு வீட்டுப் பணியாளர்கள் நல அறக்கட்டளையும் இணைந்து நடத்தப்பட்டது.

இ) சர்வதேச மகளிர் தினம் 08.03.2023 அன்று கொண்டாடப்பட்டது.

ஈ) புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பிரச்சனைகள் குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் 13.04.2023 அன்று கையெழுத்தானது.

உ) சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிக்கும் சர்வதேச தினம் 26.06.2023 அன்று அனுசரிக்கப்பட்டது.

ஊ) சர்வதேச மனித உரிமைகள் தினம் டிசம்பர் 10, 2023 அன்று கொண்டாடப்பட்டது. அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் மனித உரிமை உறுதிமொழி

எடுத்துக்கொள்வதோடு, ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 10ஆம் தேதி மனித உரிமைகள் தினத்தை அனுசரிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

இவை தவிர, நேரடியாக பணி நியமனம் பெறும் காவல்துறை மற்றும் சிறைத்துறை அதிகாரிகளுக்கு பயிற்சியும் மற்றும் சட்டம், உளவியல், குற்றவியல், மனித உரிமைகள் குறித்த கல்வி பயிலும் கல்லூரி மாணவர்களுக்கு நிலையப் பயிற்சியும் இவ்வாணையத்தால் வழங்கப்பட்டு வருகிறது.

ஆணையம் 07.12.2020 முதல் இணையதளத்தின் மூலமாக வரும் புகார்களை பதிவிறக்கம் செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், இவ்வாணையத்தின், நீதிமன்றங்களில் காணொளி காட்சி மூலம் வழக்குகளை விசாரிப்பதற்கு, தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

## 10. முடிவுரை

வெளிப்படையான நிர்வாகமே சிறந்த நிர்வாகமாகவும் வேகமாகப் பணியாற்ற கூடியதாகவும் இருக்கும். இன்றைய மின்அலுவலகம் (e–office) நடைமுறையால் மக்கள் விரைவான தீர்வுகளை எதிர்பார்க்கிறார்கள். அலுவலர்கள் நேர்மையாகவும், விரைவாகவும், விழிப்புணர்வுடனும், அக்கறையுடனும், பரிவுடனும், பண்புடனும், சமூக உணர்வுடனும் செயல்பட வேண்டும் என்பதே இன்றளவில் பொது மக்களின் எதிர்பார்ப்பாகும். அதை நெறிப்படுத்துவதற்கு பொதுத் துறையே ஒருங்கிணைக்கும் துறையாக செயல்படுகிறது. தற்போதுள்ள நவீன நிர்வாக மற்றும் ஒருங்கிணைப்பு கருவிகளைப் பயன்படுத்தி அதிகாரிகள் தங்கள் கடமையை நியாயமான முறையில் ஆற்றுவதை இத்துறை உறுதி செய்கிறது.

**மு.க.ஸ்டாலின்**
**முதலமைச்சர்**

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை – 600 001.